# தங்கம்

ரா. சீனிவாசன், M. A.,
தமிழ்த்துணைப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி

UNIVERSITY EXTENSION LIBRARY
14 AUG 1961
MADURAI

விற்பனை உரிமை:

பாரி நிலையம்,

59, பிராட்வே, சென்னை - 1.

ரூ. 1-4-0

முதற் பதிப்பு: 1955

உரிமை ஆசிரியர்க்கு

காக்ஸ்டன் அச்சகம், சென்னை 1.

# முன்னுரை

திறமை இருக்கிறது; அதைப் புலப்படுத்த இடம் இல்லை. பயிற்சி இருக்கிறது; அதைப் பயன்படுத்தத் தொழில் இல்லை. ஆர்வம் இருக்கிறது; அதைக்கொண்டு வாழ வாய்ப்பு இல்லை. இதுதான் இந்தக் காலத்தின் நிலைமை.

வாழவேண்டும் என்ற ஆர்வம் இருந்தும், அதற்கு ஏற்ற வாய்ப்பு இல்லாத காரணத்தால், பலர் வாடித் துன்புற நேர்கின்றது என்ற உண்மையை விளக்குவது இந்தக் கதை.

வள்ளியும் தங்கமும் வாழ்க்கையில் ஆர்வம் கொண்ட பெண்மணிகள். சுந்தரமும் அப்படிப்பட்டவனே. ஆனால், சூழ்நிலையும் பணவேட்டையும் அவர்களை எங்கெங்கோ ஈர்த்துச் சென்று ஏமாற்றம் விளைக்கின்றன. இவற்றிற்கு இடையிலும் மனமாற்றமும் துணிவும் இருந்தால் வாழ்ந்திட முடியும் என்பதையும் கதை விளக்கி முடிகின்றது.

இதன் ஆசிரியர் திரு. ரா. சிநிவாசன் உலக வாழ்க்கையை ஆராய்ந்து உணர்ந்தவர்; கலையுலகில் ஈடுபாடும் உள்ளவர். இவர்தம் முயற்சி மேன்மேலும் தழைப்பதாக.

மு. வரதராசன்.

UNIVERSITY ... ION
MADURAI

# [ 1 ]

**மறையாயோ வெண்ணிலாவே—வானில் நீ**
**மறையாயோ வெண்ணிலாவே**

என்று ஆற்றங்கரை நோக்கி வந்துகொண்டிருந்த தங்கம் பாடிக்கொண்டே வந்தாள். இடுப்பில் தாங்கிவந்த அந்தத் தண்ணீர்க்குடத்தைக் கீழே இறக்கி வைத்தாள். "ஏ! குடமே நீ வாழ்க" என்று அவள் உள்ளம் அதனை வாழ்த்தியது. "வீட்டில் அடைபட்டுக்கொண்டிருக்கின்ற எங்களைப் போன்ற இளங் கன்னியர்க்கு நீதான் விடுதலை வாங்கிக் கொடுக்கிறாய். நீ இல்லாவிட்டால் சுந்தரத்தை நான் நிச்சயமாகச் சந்திக்கமுடியாது" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு அங்கே உட்கார்ந்து அதனைத் துலக்கிக் கொண்டிருந்தாள். அவன் வருகிறவரைக்கும் பொழுது போக்குவதற்காகத் துலக்கிக் கொண்டிருந்தாள் என்பது அவள் அவ்வளவுநேரம் துலக்குவதிலிருந்து நன்கு தெரிந்தது.

குடத்தைக் கழுவிவிட்டு அதனை மணல்மீது வைத்தாள். அவள் துணி துவைக்கும் கல்லில் உட்கார்ந்தவாறே தன் இரண்டு கால்களையும் நீரில் தொங்கவிட்டாள். சில்லென்ற அந்த நீர் அவள் உள்ளத்தைப் போலவே குளிர்ந்திருந்தது. ஓரத்தில் சிறுமீன்கள் கூட்டங் கூட்டமாக வந்து அவ்வப்பொழுது அவள் கால்களில் மோதின. அது அவளுக்கு ஒருவகையான கூச்சத்தை உண்டாக்கியது. கால்களை எடுத்து விட்டு மேல்கரையில் மணலில் சிறிது நேரம் உட்கார்ந்தாள்.

"ஏன் இன்னும் வரவில்லை?" என்ற கேள்வி அவள் உள்ளத்தில் விடாமல் எழுந்துகொண்டிருந்தது. சுந்தரம் அவள் காதலன். சுந்தரம் ஏன் இன்னும வரவில்லை என்று அவள் கேட்ட கேள்விக்கு விடை கிடைக்கவில்லை. உணர்வுப் பெருக்கால் மகிழ்ச்சிகொண்டிருந்த உள்ளம் மெல்ல வருத்தத்தின் ஓரத்தைத் தொட ஆரம்பித்தது. குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு மெல்ல மனந் தளர்ந்து நடந்து வீடு திரும்பினுள்.

வெறிச்சென்ற அவள் உள்ளத்தைப் போலவே அவள் திரும்பி வந்தபொழுது அந்தக் குடத்திலும் நீர் இல்லை. நடையில் சோர்வு இருந்ததைப்போலவே அவள் பார்வையில் ஏமாற்றமும் கலந்திருந்தது. "ஏன் குடத்தில் தண்ணீர் இல்லை?" என்று அம்மா கேட்டபொழுதுதான் அவள் தன் சுயநினைவுக்கு வந்தாள். பனிச்சென்று நிலைமையை உணர்ந்துகொண்டாள். அவள் நீர் கொண்டுவர மறந்ததை உணர்ந்தாள்.

"ஆற்றங்கரையில் ஒண்டியாகப்போக பயமாக இருந்தது அம்மா. அங்கே எனக்குத் துணை இல்லை. அதனுல் வந்துவிட்டேன்" என்று சொல்லித் தப்பித்துக்கொண்டாள்.

"ஆமாம்'மா நீ தனியே அங்கெல்லாம் போகக்கூடாது" என்று சொல்லி ஆறுதல் கூறினுள்.

இரவு மணி எட்டு அடித்தது. ஊரில் அமைதி நிலவிற்று. ஆனுல் உள்ளத்தில் அமைதி கலைந்தது. "சுந்தரம் கட்டாயம் வருவதாகச் சொல்லி ஏன் வரவில்லை?" என்று சிந்தனையின் தொடர்ச்சியில் ஆழ்ந்துவிட்டாள்.

அதே சமயத்தில் எட்டரைமணி ரயில்வண்டி வாராவதியின்மீது சென்று கொண்டிருந்தது. 'கட கட' என்ற சத்தம் அதன் வேகத்தை எடுத்துச் சொல்வதுபோல

இருந்தது. அந்த வண்டியில் தான்சுந்தரம் செல்கிருன் என்ற செய்தி அவளுக்குத் தெரிந்திருந்தால் அந்தவண்டியின் செல்கையில் அவள் மனம் சென்றிருக்கும். அந்த வண்டியைப்பற்றி அவள் இப்பொழுது பொருட்படுத்தவில்லை. "கூ" என்று குரல் கொடுத்துவிட்டு வண்டி வேகமாகப் போய்விட்டது.

அந்தச் சமயத்தில் காற்றில் மிதந்துவந்த வானெலிப் பாடல்கள் இசைத்துக்கொண்டிருந்தன. அவள் செவி சாய்த்து அவற்றைக் கேட்டாள் என்று சொல்ல முடியாது. அவள் பிரிவுள்ளத்தின் சோக உணர்வுக்கு ஒரு சில பாடல்கள் பின்னணியாக அமைந்திருந்தன. அவையும் சிறிது நேரத்தில் அடங்கிவிட்டன.

சுற்றுப்புறத்தில் இருந்த குடிசை வாழ்வோர் இந்த நாட்டின் முத்தமிழ்க் கலையாகிய கூத்து ஆடுவதில் பழகிக் கொண்டிருந்தனர். அவர்கள் பாட்டு வெறும் இரைச்சலாகவே அவளுக்குத் தோன்றின. சிறிது நேரத்திற்கெல்லாம் வான வெளியில் சென்றுகொண்டிருந்த விமானத்தின் சப்தம் விர்ரென்று ஒலித்து அடங்கிவிட்டது. திடீரென்று தோன்றிய அந்த விமானத்தைப் போலவே அவள் உள்ளத்தில் பளிச்சென்று நம்பிக்கை தோன்ற ஆரம்பித்தது. மனத்தில் ஒருவகையாகத் தெளிவு பிறந்தது.

"இன்று சந்திக்காவிட்டால் என்ன? நாளைக்குச் சந்தித்தால்போகிறது" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். பிறகு அவள்மனம் பின்னேக்கிச் சென்றது. சந்திரன் தோன்ருத இரவுகளில் சிறிதும் கவலையில்லாமல் அந்த ஆற்றங்கரை மணற்பரப்பில், சுந்தரத்தோடு கவிதைகளைப்போலக் காதற்பெருக்கில் அர்த்தமற்ற பேச்சுக்களில் காலங்கடத்தியது அவள் நினைவுக்கு வந்தது. மற்றவர்கள் கண்ணில் படாமல் பழகுவதற்கு இருள் எவ்

வளவு உதவியது என்று எண்ணிய அவள் மனம், நிறைந்த நிலவினிலே சுந்தரத்தோடு உரிமையாகப் பழகும் நாள் என்றுவரும் என்று ஏங்கி அந்த நாட்களைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது.

## [ 2 ]

பொழுது விடிந்தது. தங்கம் தூக்கத்தைவிட்டுச் சீக்கிரம் எழவில்லை. அப்படி எழுவதில் அவளுக்கு உற்சாகம் இல்லை. ஆனாலும் எட்டு மணிக்கெல்லாம் படுக்கையை விட்டு எழுந்து விட்டாள். வழக்கம் போலப் பகல் வந்தது. மாலைப்பொழுதும் வந்தது. அப்பொழுதுதான் அவளுக்குச் சிறிது உற்சாகம் வந்தது. பட்டுப் புடவை உடுத்திக்கொண்டால் பகட்டாக இருக்குமேயன்றி அழகாக இருக்காது என்பதை உணர்ந்த அவள் சாதாரண கைத்தறிப் புடவையையே கட்டிக்கொண்டாள். கூந்தலைப் பல நிறப் பூக்கள் அலங்கரித்தன. மறுபடியும் தண்ணீர்க் குடம் அவளுக்கு வழக்கம்போல விடுதலை கொடுத்தது.

நேற்றைப் போலவே இன்றும் சுந்தரத்தைச் சந்திக்க முடியாமல் வெறிச் சென்று வீடு திரும்பினாள். ஆனால் அன்று போல இல்லாமல் குடத்தில் நீரைக் கவனமாக நிறைத்து எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

தண்ணீர்க் குடம் அவளுக்கு உதவுவதாக இல்லை. அதனால் சிலநாளாக அவள் ஆற்றங் கரைக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டாள். “அம்மா! நீயே போய் எடுத்து வா எனக்குக் கஷ்டமாக இருக்கிறது” என்று சொல்லி விட்டு வீட்டிலேயே இருந்து விடுவாள்.

வீட்டுத் தோட்டத்தின் பின்புறத்தில் சிறு ஓலைக் குடிசை. அதிலே இருந்து வெளியே வந்து கொண்டிருந்தாள் முனியன் மகள் வள்ளி. உடனே, வள்ளி இருந்த குடிசையை நோக்கித் தங்கம் சென்ருள்.

வள்ளியும் தங்கமும் அதே தோட்டத்தில், சின்னஞ் சிறு வயது முதல் ஆடிப் பாடிச் சிறு வீடு கட்டி மணற் சோறு ஆக்கிக் கற்பனை உலகில் வாழ்ந்தது முதல், சுந்தரமும் தங்கமும் சந்தித்துக் காதலுரைகள் பல பேசிக் காதலர்களாக வாழத் தொடங்கிய உண்மை வாழ்க்கைக்கு வள்ளி சில சமயங்களில் உதவியது வரை, தங்கத்தின் வாழ்வில் முக்கியமான பங்கை அவள் பெற்றிருந்தாள். அதனுல் தான் வள்ளியின் குடிசையை நோக்கித் தங்கம் வந்து கொண்டிருந்தாள்.

"வள்ளி!" என்று கூப்பிட்டாள் தங்கம்.

"அக்கா! தெரியும் எதற்காக வந்திருக்கிருய் என்று. ஆற்றங்கரையில் அடைந்த ஏமாற்றம்!"

"அது எப்படித் தெரியும்?"

"இல்லாவிட்டால் இந்தக் குடிசைக்கு ஏன்'மா வரப் போறீங்க."

"குடிசை வீடு எங்கள் ஓட்டு வீட்டை விடக் குளிர்ச்சி அளிப்பதால்தான்."

"நீங்கள் சுந்தரத்தைச் சந்திக்கவில்லை என்பது எனக்குத் தெரியும்."

"அதனுல்தான் உன்னைக் கேட்கலாம் என்று வந்தேன்."

"ஏன் அக்கா இப்படி மறைவாகச் சந்தித்து வேதனைப் படவேண்டும்?"

“ வேண்டாம். நேரே சந்தித்து அம்மாகிட்டே அடியும் திட்டும் படணும்.”

“ இல்லே’க்கா, காதலெல்லாம் கொஞ்ச நாளைக்குத் தான் மறைவாய் இருக்க வேண்டும். சீக்கிரம் எல்லாரும் கவனிக்கிற மாதிரி நடந்துகொள்ள வேண்டும். அப்பத் தான் வெற்றி கிடைக்கும். இது தெரியாமல், பலபேரு வாழ்க்கையிலே தோல்வி அடைந்திருக்கிறார்கள். யாருக் கும் தெரியாமல் தானே பழகினோம் என்று ஆண்களும் சந்தர்ப்பம் வரும்பொழுது நழுவி விடுகிறார்கள். பெண் களும் பெரிய இடம் கிடைக்கும்பொழுது அவனைக் கைவிடு கிறார்கள். இரண்டு பேரும் இந்தத் தவறு செய்யாதிருக்க வேண்டுமானால் தைரியமாகப் பலரும் அறிய வீடுகளிலேயே பழக வேண்டும். அம்மா! தோட்டம் துறவு ஆற்றங்கரை கடற்கரை இதெல்லாம் அவ்வளவு வெற்றி கொடுக்காது.”

“ சரிதான் நீ செய்வே. நீ அப்படித்தான் செய். உடனே என்ன நேருகிறது என்று பார்த்துப் பிறகு எனக் குச் சொல்லேன்.”

“ அப்படி நடந்து கொள்வதால்தான் குடிசைக் காதல் வெற்றி பெறுகிறது. மறைவாக நடந்து கொள்வதால் தான் மாடி வீட்டுக்காதல் தோற்றுவிடுகிறது. பாருங்க எங்க குடும்பங்களிலெல்லாம் உடனே தெரிஞ்சுக்கிறபடி தான் நாங்க நடந்துகிறோம். கலியாணம் இதெல்லாம் சாதா ரணமா நடந்து போவுது.”

“ சரிதான்! எங்க வீட்டிலே நீயே வந்து இதெல்லாம் சொல்லிவிடப் போறே! பத்திரம்.”

“ நான் சொல்லி அவங்க கேட்டுக் கொள்கிற அள வுக்கு உங்க குடும்பங்கள் இன்னும் பக்குவப் படலே’ம்மா. உடனே, நீங்க வெளியே வருவது கூட முடியாமல் போயிடும்.

இல்லாவிட்டால் நான் எப்பவோ சொல்லி விடுவேன். நீங்களே துணிந்து பலர் அறியப் பழகவேணும். அதுதான் நல்லது. வெற்றியுஞ் சீக்கிரம் கிடைக்கும். எப்படியாவது உண்மையை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருக்கவேண்டும். அம்மாவும் அப்பாவும் மட்டும் தெரிந்துகொண்டால் போதாது. ஊரார் எல்லாம் அவரைத் தூற்றி உங்கபேரிலே அவதூறு உண்டாக்குகிற அளவுக்கு நீங்க நடந்து கொண்டால் நிச்சயமாக வேறே வழி இல்லாமல் உங்களுக்குத் திருமணம் நடந்து விடும். இல்லாவிட்டால்"

"இல்லாவிட்டால்?"

"இல்லாவிட்டால் பெரியவங்களா ஒரு இடத்தைப் பார்த்துக் கழுத்தை வளை என்று சொன்னல் வளைத்துக் கொடுப்பது எவ்வளவோ நிம்மதி. இந்த மாதிரி காதல் கீதல் என்று அவஸ்தைப் பட வேண்டியதில்லை."

"ஆமாம், பலியாகிற ஆடுகள் கூட இப்படித்தான் வளைத்துக் கொடுக்கின்றன."

"நீங்க வாழத்தானே தலையை வளைத்துக் கொடுக்கச் சொல்'றேன்."

"அப்படித்தான் பலரும் வாழ்ந்து வருகிறுர்கள். அது என்னல் முடியாது. நான் சுந்தரத்தைத்தான் மணந்து வாழ்வேன். இந்த உறுதியை என்னலும் மாற்ற முடியாது. அது போகட்டும் சுந்தரம் ஏதாவது"

"இதோ அக்கா! அவர் கொடுத்துப் போன கடிதம். விரைவில் வருவதாகப் போயிருக்கிறுர்."

அதற்குமேல் வள்ளி பேசிய சொற்களைச் செவிகொடுத்துக் கேட்க வில்லை. அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படிக்

கத் தொடங்கினுள். 'மெர்க்குரி' விளக்கு மெல்ல மெல்ல வெளிச்சம் பெறுவது போல அவள் முகத்தில் மலர்ச்சி தோன்ற ஆரம்பித்தது. அதற்குள் வெளியூர்க்குப் போய்த் திரும்பி வந்த அவள் தந்தையார் அப்பொழுது தான் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தார். அவர் வருவது தெரியாமல் படித்துக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா கடுதாசி அது?" என்று கேட்டுக் கொண்டே வந்தார். 'திக்' என்று தூக்கி வாரிப் போட்டது. சட்டென்று அந்தக் கடிதத்தைக் கிழித்துப் போட்டு விடலாமா என்று எண்ணத் தொடங்கினுள். ஆனுல் சந்தேகத்துக்குத் தானே இடங் கொடுத்தது போல ஆகும் என்று பளிச்சென்று அவள் உணர்ந்து கொண்டாள்."

"அப்பா! இது ஊரிலே இருந்து வந்ததாம். கிறுக்கெழுத்தாக இருந்ததால் வள்ளி என்னைப் படிக்கச் சொன்ஞள். படித்துச் சொன்னேன்'பா" என்று பதில் சொன்ஞள் தங்கம்.

"ஆமாங்க! நான் தானுங்க கொடுத்தேன் படிக்கச் சொல்லி" என்று அதை வாங்கிக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள் வள்ளி. அவர் கால் கழுவ ஓடிச் சென்று தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். அவரும் கால் கழுவிக் கொண்டு கூடத்தில் வந்து உட்கார்ந்தார். சைனுவுக்குச் சென்று திரும்பி வந்த வி. கே. மேனன் கூட அவ்வளவு முக்கியமான காரியத்தைச் சாதித்து விட்டதாக எண்ணியிருக்க மாட்டார். ஆனுல் இவர் செயற்கரிய காரியத்தைச் சாதித்து விட்டவரைப் போல பெரிய அகம்பாவத்தோடு ஒன்றும் பேசாமல் இருந்து கொஞ்சம் கனைக்க ஆரம்பித்தார்.

இவர் போன செய்தி என்னவாயிற்று என்று ஆவலோடு காத்துக் கிடந்த தங்கத்தின் தாய் அப்படியே

அடுப்பிலிருந்த பாலை இறக்கி வைத்து விட்டுக் கூடத்திற்கு வந்தாள். எதையும் உடனே கேள்வி கேட்டுப் பதில் சொல்லக் கூடிய நிலைமையில் அவ்வளவு உரிமையாகவோ சமமாகவோ பழகாத காரணத்தால் இப்பொழுதும் அவராகச் சொல்லுவதை எதிர்பார்த்து நின்ருள். பரிட்சையில் சரியாக எழுதாத மாணவன் தன் முடிவைப் பார்க்க விருப்பம் இல்லாவிட்டாலும் பத்திரிகையில் வரும் எண்களை எப்படியும் பார்க்க முனைவது போலத் தங்கமும் அவர் சென்று வந்த செய்தியில் விருப்பம் இல்லாவிட்டாலும் பழைய வாரப் பத்திரிகையின் ஏடுகளைப் புரட்டிக் கொண்டு அவர்கள் பேசுவதை உற்றுக் கேட்டாள்.

அந்தச் சொற்கள் ஒவ்வொன்றும் அவளைச் சுட்டெரிக்கும் நெருப்பின் பிழம்புகளாக இருந்தன. வேதனை தாங்க முடியாமல் அடுத்த அறையில் கட்டிலில் சாய்ந்து விக்கி விக்கி அழுதாள். அந்த அழுகையால் வந்த கண்ணீர் அவள் துன்பத்தின் வெம்மையை ஓரளவு ஆற்றியது எனலாம். பெண்கள் அழக் கற்றுக்கொள்ளவில்லையென்ருல் தற்கொலைச் செய்திப் பத்திரிகைகள் அதிகமாக வளர்ந்துவிடும். அந்த அழுகைதான் அவளைக் காப்பாற்றியது. அவள் எவ்வளவு நேரம் அழுது கொண்டிருந்தாள் என்பது தெரியாது.

அவள் கண்க்ள் செக்கச் செவேலென்று சிவந்து விட்டன. அவள் இட்டிருந்த கரிய மை கலங்கி அவள் உள்ளத்தில் குடிகொண்டிருந்த இருளை வெளிப்படுத்துவது போல இருந்தது. உள்ளத்தின் வேதனையை அவளுடைய சிவந்த கண்கள் எடுத்துக்காட்டின.

தங்கத்தின் தாய் சாப்பிட அழைக்க அந்தப் பக்கம் வந்து அவளை எழுப்பினுள். உடம்பெல்லாம் சூடாக வியர்த்துக் கொட்டிக்கொண்டிருந்தது.

"ஏன் 'மா ஒரே புழுக்கத்தில் இருக்கிறே" என்று கேட்டாள்.

"நீங்கள் தான் கதவை யெல்லாம் மூடிவிட்டீர்களே" என்று சட்டென்று பதில் சொன்னாள்.

"வாம்'மா ! வந்து சாப்பிடு. அப்பாவும் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் !"

"எனக்குப் பசி இல்லே. உங்கள் விருப்பத்திற்காக நான் சாப்பிட முடியாது" என்று வெடுக்கென்று பதில் சொன்னாள்.

"ஏன்'மா இப்படி அழுறே ! கண்களில் ..."

"வேறே செய்யத் தெரியாமல்" என்று சொல்ல வந்த வள் அதைச் சொல்ல விருப்பமில்லாமல்,

"நீங்க இப்படி வற்புறுத்துவதால்தான்" என்று சொன்னாள்.

" அதற்காகவா அழுவே ! உன் விருப்பம் போலத்தான் செய்யேன்'மா" என்று சொல்லி விட்டு அந்த அறையை விட்டு வெளியே வந்து விட்டாள் அவள் தாய்.

" ஆம் ! அழக்கூடாது. என் விருப்பப் படித்தான் செய்யப் போகிறேன்" என்று தீர்மானத்துக்கு வந்த வளாய் அந்த இடத்தை விட்டு எழுந்து வெளியே வந்தாள்.

"சாப்பிடம்மா" என்று மறுபடியும் அவள் தாய் வற்புறுத்தினாள்.

"வேண்டாம். எனக்குப் பசி இல்லே."

" அப்பா கோவிச்சிக்கப் போறாரு. சாப்பிடம்மா."

“ அப்பாவுக்காக அம்மாவுக்காக என்று எதையும் செய்ய முடியாது” என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள்.

அவள் உள்ளத்தில் எழுந்த எதிரொலியான அந்தச் சொற்களின் பொருள் தங்கத்தின் பெற்றோர்களுக்கு விளங்க வில்லை. ஆனால் அந்தச் சொற்கள் வாழ்வின் இருளைப் போக்கும் விடிவெள்ளியாக இருந்தது. இருளுக்குப் பின் ஒளி உண்டு என்ற நம்பிக்கை அவள் உள்ளத்தில் பிறந்தது.

## [ 3 ]

“அப்பாவுக்காக அம்மாவுக்காக என்று எதையும் செய்ய முடியாது” என்று தோட்டத்தில் வள்ளியுடன் அதே பதிலைத்தான் தங்கம் சொன்னாள்.

“ஏன்’மா அப்பாவின் கட்டளையை எப்படி மீற முடியும்?”

“என் கட்டளையைத்தான் அவர் மீறுகிறார். இங்கே அப்பாவின் விஷயம் ஒன்றுமே கிடையாது அவர் கட்டளையிடுவதற்கு. என் விஷயத்தைப் பற்றி முடிவு கட்டித் தெரிவிக்கிற உரிமை எனக்குத்தான் இருக்கிறது. அதைக் கட்டளை யென்றாவது சொல், விருப்பம் என்றாவது சொல். சின்னவங்க சொன்னால் விருப்பம் பெரியவங்க சொன்னால் கட்டளை அவ்வளவுதான் வித்தியாசம். என் கட்டளையை மீறுவதற்கு என் தந்தைக்கு உரிமை கிடையாது என்று தான் சொல்ல முடியும்.”

"சரி! அப்பா ஏன்'மா உங்க விருப்பத்தை மறுக்கிருர்?"

"அவர் மேலேயும் தவறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இப்பொழுது நடக்கிற கலியாணமெல்லாம் வியாபாரம் என்றுதான் சொல்ல முடியும். பெண் பணக்காரன் வீட்டில் வாழ்க்கைப்பட வேண்டும் என்று ஆசைப் படுகிருள். பையனும் பணக்காரப் பெண்ணைக் கலியாணம் செய்து அவர்கள் வீட்டில் 'வாழ்க்கைப்பட' வேண்டுமென்று ஆசைப்படுகிருன். இந்த மாதிரி ஒருவர் பணத்திற்கு இன்னெருவர் ஆட்பட வேண்டுமென்று ஏற்படுத்திக் கொள்கிற ஏற்பாட்டிற்குத்தான் நடைமுறையில் திருமணம் என்று பெயர். என் மாதிரி காதல் கலியாணம் அது இது என்று சொல்வதெல்லாம் கதையெழுதுவோரின் கற்பனையில் தோன்றும் சாதாரண நிகழ்ச்சிகள். இதுதான், உண்மை. அதனுல் எங்க அப்பா மேலே குற்றம் சொல்வதற்கு எனக்கு விருப்பம் இல்லை."

"என்னும்மா நீங்க சொல்றது! ஒருசிலர் காதல்கலியாணம் செய்து கொள்றதை நான் பார்த்திருக்கிறேனே'ம்மா!"

"ஒன்று சாதாரண கலியாணத்தையே அந்த உயர்ந்த பெயரால் சொல்லுகிருர்கள். மற்றொன்று, வேறு அதை விடப் பெரிய சந்தர்ப்பம் கிடைக்காமல் இருந்திருக்கலாம். அதுவும் இல்லாவிட்டால் அவர்கள் என்னைப்போலப் பைத்தியக்காரர்களாக இருக்கலாம்."

"அப்ப, அப்பா செய்வது தப்பு இல்லையே அம்மா!"

"முற்றிலும் சரியானது. தன் மகளை ஏழைக்குக் கொடுத்து அவள் வறுமையால் நொந்து அதோடு குழந்தைகளை இடைப்பொழுது இல்லாமல் பெற்றுக் கொண்டு வாழ வகை

யில்லாமல் தவிப்பதை எந்தத் தந்தையும் ஒப்புக்கொள்ள மாட்டார். தன் பெண் நல்ல இடத்தில் வாழ வேண்டு மென்று சொல்லித் தன் சொத்து சுதந்தரம் எல்லாவற்றை யும் விற்றுவது உயர்ந்த இடத்தில் கொடுக்கப் பார்க்கிருர். இந்த முயற்சிக்குத்தான் வரதட்சிணை என்று பெயர்."

"அவர் வரதட்சிணை கொடுத்துத்தானே உனக்குத் திருமணம் ஏற்பாடு செய்திருக்கிருர்?"

"அதுதான் இல்லே. இவர் அந்த வரதட்சிணையைக் கொடுக்கப் பயந்து கொண்டுதான் என்னே இரண்டாந்தார மாக ஏற்பாடு செய்திருக்கிருர். அவர் பணம் சம்பாதிக் காதது ஒரு பெரிய குற்றம். பெண்ணேப் பெற்ருல் உடன் பணத்தையும் படைக்க வேண்டும். அதுதான் இன்றைய சமூகத்தில் அவசியமாகச் செய்ய வேண்டியது. அதுதான் போகட்டும். அப்பாவுக்கு ஒரு செலவுமில்லாமல் நாஞக அமைத்துக் கொண்ட ஏற்பாட்டை அவர் ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது. அதைத்தான் நான் கண்டிக்கிறேன். காதல் கலியாணத்தால் பெற்ருேர்களுக்கு எவ்வளவோ சுமை குறைகிறது. அதைத்தான் நான் வற்புறுத்திச் சொல்கிறேன். அவர் அதைக் கேட்கவில்லே. நாஞகச் சுந்தரத்தின் பின்னுல் போய்ப் பதிவுத் திருமணம் செய்து கொண்ட பிறகு ஏற்றுக் கொள்வார்கள். அதுவரையிலும் அவர்களுக்கு அறிவு பிறக்காது."

"இந்த மாதிரிக் காதல் கலியாணங்களெல்லாம் தோல்விதானே'ம்மா அடைந்திருக்கிறது."

"ஆம். கட்டாயம் தோல்வி அடையும். பெண்களுக்கு இந்தத் துறையில் உரிமை கொடுக்கப்படவில்லே. அதை மறந்து விடாதே. அதனுல் அவர்கள் சரியான அறிவும் பெறவில்லே. பயிற்சியும் அறிவும் பெருத ஒரு துறையில் தோல்வி அடைவதில் வியப்பே கிடையாது."

“ அப்ப எனக்கு எங்க அப்பாவாகப் பார்த்துக் கலியாணம் செய்து வைப்பது தானே’ம்மா நல்லது ?”

“ அது நல்லதில்லை என்று எந்த அறிவாளியும் மறுக்க மாட்டான். எல்லாவகையான ஏற்பாடுகளுக்கும் உரிமை கொடுக்கவேண்டும் என்பதுதான் நான் சொல்லுவது. ஒன்றுமே தெரியாத பட்டிக்காட்டுப் பெண்ணைக் காதல் கலியாணம் செய்து கொள்ளச் சொன்னால் இந்தப் பிறவியில் அவளுக்குக் கலியாணம் நடக்காது. அதே போலப் பணக்காரர் வீடுகளில் சுருசுருப்பில்லாமல் வளர்கிற பெண்களுக்குப் பெரியவர்களாகப் பார்த்துத்தான் கலியாணம் செய்யவேண்டும். நடுத்தர வகுப்பிலிருந்து வாத்தியார் வேலை ஏற்றுக் கொண்டு வாழ்க்கை நடத்தும் ஒரு சில ஆசிரியைகளுக்குக் காதலும் ஏற்படாது ; ஏற்பட்டாலும் நிலைத்து நிற்காது ; கலியாணமும் நடக்காது. வயதான பிறகு கலியாணம் செய்துகொள்ள ஆசை பிறக்கிறது. அவர்களுக்கு ஆசை பிறக்கும்பொழுது அவர்களை மணந்து கொள்ள யாரும் முன் வருவதில்லை. குழந்தைகளைப் போல இவர்களுக்கெல்லாம் எப்பொழுதும் பெற்றோர்களின் உதவியும் வற்புறுத்தலும் கட்டாயம் வேண்டும். ஆனால் என்னைப் போலச் சிலர் உரிமையாக வாழவேண்டுமென்று எண்ணி அதற்கேற்ற மனவளர்ச்சியும் பெற்றுவிட்டால், எங்களுக்கும் வாழ உரிமை கிடைக்க வேண்டும். இதுதான் நான் கேட்பது.”

“ அந்த உரிமை யெல்லாம் இப்ப கிடைக்காதம்மா. சொத்திலும் பணத்திலும் சமத்துவம் கிடைக்கிற வரையிலும் இது நடக்காதம்மா.”

“ ஆம். எந்த உரிமையை அடைவதற்கும் சிறிது போராட்டம் நடத்தித்தான் தீர வேண்டும். அடுத்த வாரம் கலியாணத்திற்கு ஏற்பாடு ஆகிவிட்டது. அதே நாளில்

நானும் சுந்தரமும் ரயிலில் சென்னைக்குப் பயணம் செய்ய ஏற்பாடு."

"சரிதான்! இவ்வளவு தூரம் என்னோடு பேசி"

"உண்மையை ஆராய்ச்சி செய்தேன். அவ்வளவுதான். அப்பா தன் கடமையைச் செய்கிறார். என் நிலைமையில் நான் என் கடமையைச் செய்கிறேன். சுந்தரம் கட்டாயம் வெள்ளிக்கிழமை வந்து விடுவதாக எழுதி இருக்கிறார். நீயும் எனக்கு உதவ வேண்டும்."

"அக்கா! எனக்குப் பயமாக இருக்கிறது."

"அப்பொழுது உன் வாழ்க்கையில் கஷ்டமில்லாமல் வாழ்ந்து விடலாம். பயந்து வாழ்கிறவர்கள் நிம்மதியாக வாழ்ந்து விடுவார்கள்."

"நீங்க மட்டும் இப்படித் துணிவாகச் செய்வது!"

"மனித இயற்கை எல்லாருக்கும் ஒன்றுதான். ஆனால் லட்சியம் என்னைத் துணிவான காரியங்களைச் செய்யத் தூண்டுகிறது. அவ்வளவுதான் வித்தியாசம். நீ விஷயத்தை யாரிடமும் சொல்லிவிடாதே" என்று கூறி அவள் வள்ளியிடம் விடை பெற்றுக்கொண்டாள்.

அவர்கள் விஷயம் இவ்வளவு தூரத்திற்கு வரும் என்று வள்ளி எதிர்பார்க்கவில்லை. "சுந்தரத்தோடு தங்கம் ஊரைவிட்டு வெளியே போய்விட்டால் என்னைத்தான் கேட்பார்கள். இந்தச் சொந்த விஷயத்தில் அனுவசியமாகப் போலீசார் வேறு தலையிடுவார்கள். நான் போலீசார் முன்பு என்ன பதில் சொல்ல முடியும்? இளம் வயது முதல் ஒன்ருகப் பழகினோமே என்ற பாசத்தால் அவளுக்கு உதவி செய்தால் கடைசியில் தீவிரமாகத்தான் முடிந்துவிட்டது. தங்கம் அவசியத்துக்காகச் செய்கிறாள். அவளுக்குக் கவலை

யில்லை. ஆனால் என் நிலைமை? என் தந்தை இதையெல்லாம் கேட்டால் எல்லாம் தெரிந்திருந்தும் நீ உடந்தையாக இருந்தாயே என்று என்னைத்தானே கண்டிப்பார். பழி கட்டாயம் என்மீதுதானே வரும்" என்றெல்லாம் தன்னைப் பற்றி எண்ணிக்கொண்டு கவலைப்பட்டாள்.

## [ 4 ]

திருமணம் நடக்க இன்னும் நான்கு நாட்களே இருந்தன. பெண் வீட்டிலேயே திருமணத்திற்கு ஏற்பாடு ஆகி இருந்தது. பிள்ளை வீட்டார் செல்வாக இருந்தபோதிலும், அந்த ஊர்க்கோயிலில் திருமணம் செய்வதாகத் தங்கம் சிறு வயதில் நோயாயிருந்த காலத்தில் கும்பிட்டுக்கொண்ட காரணத்தால், அங்கேயே திருமண ஏற்பாடுகள் வழக்கம்போல ஆடம்பரமாகவே நடந்துகொண்டிருந்தன.

அதற்குள் சுந்தரம் வந்துவிடுவான் என்ற நம்பிக்கை அவள் உள்ளத்தில் ஆழ்ந்து கிடந்தது. அதனால்தான் அவளும் ஓரளவு குதூகலமாக இருந்தாள். அவள் கற்பனையெல்லாம் சென்னையிலே எப்படித் தனிக் குடித்தனம் செய்வது, முன்பின் தெரியாத நகரமாயிற்றே என்ற கவலையும், அதே சமயத்தில் அவரோடு உரிமையாக வாழ்வதில் கொண்டுள்ள இன்பமுமாக மாறிமாறி அவள் எண்ணத்தில் தோன்றிக் கொண்டிருந்தன.

எப்படியும் திருமணத்தன்று அந்த ஊரில் இருப்பதில்லை என்ற தீர்மானத்துக்கு வந்துவிட்டாள். பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்குக் காத்துக் கொண்டிருப்பவர்களைப்

போலச் சுந்தரம் வரும் நாளை எதிர்பார்த்துக்கொண் டிருந்தாள். அவள் உள்ளமும் ஆவலின் எல்லையை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தது. விடுதலை அடையக் காத்துக் கிடக்கும் கைதியைப் போல அவள் உள்ளம் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தது. வீட்டில் ஓர் இடத்திலும் அமைதியாக இருக்க இருப்புக் கொள்ளவில்லை. முன்னுக்கும் பின்னுக்குமாகக் காரணம் இல்லாமல் நடந்துகொண் டிருந்தாள்.

மேசைமேல் செய்தித்தாள் ஒன்று கிடந்தது. எதிர்பாராமல் அந்தப் பத்திரிகையை எடுத்துப் படித்தாள். அதில் இருந்த திடுக்கிடக்கூடிய சம்பவம் அவள் உள்ளத்தை நடுங்கச் செய்துவிட்டது. 'சென்னையில் வேலை தேடி வந்த திருச்சியைச் சார்ந்த சுந்தரம் என்ற இளைஞன் வேலை கிடைக்காத காரணத்தால் ரயிலடியில் விழுந்து தற்கொலை செய்து கொண்டான்' என்ற செய்தியைப் படித்தாள். அதற்குமேல் அவள் தன் சுய உணர்வை இழந்து விட்டாள் என்றுதான் சொல்ல முடியும்.

மயக்கம் வந்து கீழே தடால் என்று விழுந்துவிட்டாள். அடுத்த நிமிஷத்தில் அவள் மூர்ச்சை தெளிந்த நிலைமையில் சிரிக்கத் தொடங்கினாள். எல்லாருக்கும் ஆச்சரியமாக இருந்தது. ஆனால் அந்தச் சிரிப்பு விடாச் சிரிப்பாக அமைந்துவிடவே, அவர்களைக் கவலையுள் ஆழ்த்தியது. அந்தச் சிரிப்பில் பயங்கரம் கலந்திருந்தது.

மறுநாள் திருமணம். பிள்ளை வீட்டார் எல்லாரும் வந்திருந்தனர். நாதஸ்வரம் புதிய சினிமாப் பாட்டு ஒன்றன் ராகத்தை அழகாகப் பாடிக் கொண்டிருந்தது. குதூகலத்தோடு எல்லாரும் ஏதோ உரையாடிக்கொண்டும் ஆடம்பரமாக உடுத்தி அலங்காரமாக அமர்ந்தும் இருந்த நிலைமை

யில், தங்கத்தின் தாயின் முகத்திலும் தந்தையின் உள்ளத்திலும் கவலையின் வடுக்கள் இடம் பெற்றுவிட்டன.

மணமகள் மணமனையில் அமர்த்தப்பட்டாள். தாலி கட்டப்பட்டுவிட்டது. தங்கம் சிறிது நேரத்திற்கெல்லாம் பயங்கரச் சிரிப்பு ஒன்று சிரித்தாள. எல்லாருக்கும் தூக்கி வாரிப் போட்டது.

“ அழகு சுந்தரமே ! கலியாண மாப்பிள்ளையே ! ஹீ ஹீ ஹீ ஹீ ” என்று பாட ஆரம்பித்தாள்.

“ ஆம் பைத்தியம் ” என்று வாய்விட்டு உரக்கக் கூவினர் அருகிருந்த மாப்பிள்ளை. “ என்ன ! பைத்தியத்தையா எனக்கு ஏற்பாடு செய்தீர்கள் ?” என்று கூச்சல் போட்டார்.

“ உங்களுக்கு ஏற்பாடு செய்த பிறகுதான் இப்படித் திடீரென்று மாறிவிட்டாள் ” என்று அவள் தந்தை மெல்லச் சொன்னர்.

“ என்னய்யா இது ! மோசம் செய்துவிட்டீர்கள். பைத்தியம் பிடித்தவளை மணஞ் செய்து வைத்துவிட்டீர்கள் ” என்று அங்கலாய்த்தார்.

“ பைத்தியம் பைத்தியம் நீதான் பைத்தியம். ஹீ ! ஹீ ! ஹீ !” என்று சிரிக்க ஆரம்பித்தாள் தங்கம்.

குதூகலம் மறைந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசிக்கொண்டார்கள்.

“ தங்கம் பைத்தியக்காரி ஆகிவிட்டாள். திடீரென்று இப்படி ஆகிவிட்டது. அய்யோ பாவம் ” என்று அக்கம் பக்கத்தில் இருந்து வந்தவர்கள் எல்லாரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“ அதெல்லாம் இல்லை. அவளுக்கு இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்பட விருப்பமில்லையாம். வற்புறுத்திக்

கலியாணஞ் செய்துவிட்டதால் இவ்வாறு திடீரென்று அவள் மனத்தில் அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டது" என்று ஒரு சிலர் உண்மை யறிந்தவர்கள் போலப் பேசிக்கொண்டார்கள்.

"ஊம் பைத்தியமானால் என்ன? எல்லாம் போகப் போகச் சரியாகப் போய்விடும்" என்று பேசிக்கொள்ளாதவர்களும் இல்லை. ஆரவாரம் மறைந்து கவலை குடிகொண்டுவிட்டது.

தங்கம் சம்பிரதாயப்படி புருஷன் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அழகின் வடிவமாக விளங்கிய தங்கம் பைத்தியமாக இல்லாவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று அவர் எண்ணாமல் இல்லை. நல்ல வைத்தியர்களைக்கொண்டு குணப்படுத்தி விடலாம் என்ற நம்பிக்கையும் அவருக்குத் தோன்றாமல் இல்லை.

## [ 5 ]

"சுந்தர மனோகரனே என்றன் மணாளனே
அருகில் வாராயோ என்னை அணுகிப் பேசாயோ"

என்று பாடிக் கொண்டிருப்பாள் தங்கம்.

"ஐயா பெரியவரே! நான் ஒரு கதை சொல்கிறேன் கேளு" என்பாள். தங்கத்தின் கணவரான தனசேகரரும் சிறிது செவி கொடுத்துக் கேட்பார்.

"பாவம்! ஒரு கிளி, தன்னிச்சையாகப் பறந்துகொண்டிருந்தது. அது தன் ஜோடியோடு பறந்துகொண்டிருந்தது. ஆண் கிளியைப் பூதம் ஒன்று விழுங்கிவிட்டது. அந்தக் கிளி என்ன செய்யும்?" பாவம் என்று கேட்பாள்.

“ பிரிந்து கஷ்டப்படும்.”

“ ஹீ ! ஹீ பிரிந்து கஷ்டப்படும். ஹீ ! ஹீ பிரிந்து கஷ்டப்படும் ” என்று விடாமல் சிரிப்பாள்.

“ ரயிலடியில் திடீர் மரணம். ஒரு வாலிபர் தற்கொலை”— தினத்தந்தி ஒரு அணு ! வாங்கிக்கோங்க சார். இதிலே எல்லாக் கொலைக் கேசும் அடங்கி இருக்கும் ” என்று சிறிதுநேரம் தினத்தந்தி செய்தித்தாள் விற்பதுபோலப் பேசுவாள்.

“ வள்ளீ ! நான் பட்டணம் போய்த் தனிக் குடித் தனம் செய்யப்போகிறேன் நீயும் சில நாள் எங்க வீட்டில் — போடி நீ எப்பவும் அப்படித்தான் சொல்வே ” என்று பேசிச் சிரிக்கத் தொடங்குவாள்.

“ அம்மா ! வாழ்கிருள் உன் மகள். அந்தரத்திலே தேரோட்டி ஆகாயத்திலே உல்லாசமாகப் பறக்குருளடி உன் மகள். லட்சணமா அவருக்கு வாழ்க்கைப் படறதைச் சீ - நீ ஒரு பைத்தியக்காரி ” என்று இப்படியெல்லாம் ஏதே னும் பேசிக்கொண்டே யிருப்பாள். புதிதாகக் கேட்கிறவர் களுக்கு இது கேட்பதற்கு வேடிக்கையாக இருக்கும். தனசேகரருக்கு இந்தச் சொற்கள் வெறும் வேதனையாக இருக்கும்.

நாட்கள் பல சென்றன. அவர் பார்க்காத வைத்தியமே கிடையாது என்று சொல்லலாம். மந்திரம் மாந்திரீகம் முத லியவற்றில் அவருக்கு அளவுகடந்த நம்பிக்கை இருந்தது. பத்திரிகைகளில் வரும் போலி விளம்பரங்களைக் கண்டு எவ் வளவோ தாயத்துக்கள் எல்லாம் கட்டிவந்தார்.

அவர்கள் தெருவில் கோயில் மடத்தில் ஒரு சாமியார் வந்திருந்தார். நல்ல வசீகரமான தோற்றம் ! சாமியார் மொழியில் சொன்னால், ‘ தூய காவி உடை ’ உடுத்தி யிருந்தார்.

" ஐயா! எங்கள் இல்லத்திற்கு எழுந்தருள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார் தனசேகரர்.

" இறைவன் அடியார்கள் அழைத்தால் யாராயிருந்தாலும் அடியேன் எப்படி மறுப்பது" என்று பதினெட்டாம் நூற்றுண்டுப் புராண மொழியிலே பேசத் தொடங்கினுர். அந்தச் சாமியாருக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது.

" சுவாமி! முற்றும் துறந்த முனிபுங்கவராகிய தங்களால்தான் என் மனைவி சுகப்படவேண்டும்."

" ஆண்டவன் கட்டளை அதுவாக இருந்தால் அடியேன் பாக்கியசாலிதான்."

" அவளுடைய பைத்தியம் உங்களால்தான் தீர வேண்டும்."

"அந்த நம்பிக்கையால்தான் அடியேன் இங்கு வந்தது."

தங்கம் இருந்த தனி அறைக்கு அந்தச் சாமியார் அழைத்துச் செல்லப்பட்டார்.

அவரைப் பார்த்தவுடன் தங்கம், " சுந்தர மனோகரனே என்றன் மணாளரே" என்ற பழைய பாட்டைப் பாட ஆரம்பித்தாள். கடிகாரத்தில் மணி எட்டு அடித்தது. " நல்ல சகுனம்தான்" என்று தனசேகரர் கூறத் தொடங்கினுர். எலுமிச்சம் பழங்களும் விபூதியும் கொண்டுவரப்பட்டன. சிறிது நேரத்திற் கெல்லாம் அந்த அறை மூடப்பட்டது. தனசேகரர் மட்டும் வெளியே இருந்து கொண்டு ஆண்டவனைப் பிரார்த்தனை செய்யத் தொடங்கினுர். ஒரு மணி நேரமாக அங்கே என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. ஆனுல் தங்கம்மட்டும் பைத்தியம் தெளிந்த நிலையில் காணப்பட்டாள்.

ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு (அதற்குப் பஞ்சமில்லை) உணவு அளிக்கப்பட்டது. அந்தச் சாமியாரின்

புகழ் அந்த வட்டாரத்தில் பரவ ஆரம்பித்தது. பலரும் அவரை வரவேற்கத் தொடங்கினார்கள். ஆனால் இந்த உபசாரங்களுக் கெல்லாம் அந்தத் துறவி இடங்கொடுக்கவில்லை.

அவரிருந்த இடத்தைத் தேடிப் பல பக்கங்களிலிருந்து திரள்திரளாக வந்து சேர்ந்தார்கள். வேறு வழியில்லாமல் விபூதி கொடுத்துக்கொண்டு வந்தார். பல நோயாளிகள் குணப்பட்டதாகச் சொல்லிக் கொண்டார்கள். அதற்கு மேல், அங்கே இருந்த பெரிய வைத்தியர்களுக்குப் பிழைப்புக் கெட ஆரம்பித்தது.

அவர்கள் மெல்லக் கதை கட்ட ஆரம்பித்தனர். "இந்தச் சாமியார் ஏதோ கொலைக் கேசு சம்பந்தமாகவோ பெரிய திருடோ செய்து இப்படித் தலைமறைவாகத் திரிந்துகொண்டிருக்கவேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு இளம் வயதில் சாமியார் ஆகவேண்டிய அவசியம் இல்லை!" என்று கதை கட்டிவிட்டார்கள். போலீசுக்கும் மெல்ல தகவல் எட்டியது. ஆனாலும், அவரைத் தொந்தரவு செய்யப் போலீசாருக்குக் கொஞ்சம் அச்சமாகவே இருந்தது. இவ்வளவு செல்வாக்குப் பெற்றவரை நாம் ஒன்றும் செய்யமுடியாது என்று மெல்ல விட்டுவிட்டார்கள்.

இவற்றையெல்லாம் கொஞ்சம் நுணுக்கமாகத் தெரிந்து கொண்ட அந்தச் சாமியார் திடீரென்று மறைந்து விட்ட பிறகுதான் அந்த ஊரில் சிறிது பரபரப்பு ஏற்பட்டது. உண்மையிலேயே, 'அவன்' என்று ஒருமையிலே பேச ஆரம்பித்தார்கள். "இல்லை அவர் ஓரிடத்திலேயே தங்க மாட்டார். பெரிய மகான்" என்று பேசிக்கொள்ளாதவர்களும் இல்லை.

அப்புறம் என்ன ஆனார் என்று யாருக்கும் தெரியாமல் போய்விட்டது.

# [ 6 ]

மாசு படிந்த ஓவியம் துடைக்கப்பட்டது. தங்கம் ஒளி வீசும் பைம்பொன்ஞக விளங்கிஞள். அந்தப் பைம் பொன்ஊத் தொட்டுப் பரிசிக்கும் ஆவல் தனசேகரரின் உள்ளத்தில் கொழுந்து விட்டது.

இளமையும் அழகும் வாய்ந்த மஊவி தனக்கு வாய்த்ததை எண்ணி அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லேயே கிடையாது. "வாழ்ந்தால் பணக்காரராக வாழவேண்டும். இல்லே யென்ருல்" அவருக்கு அதற்குமேல் சொல்ல வரவில்லே. "வாழ்க்கையின் இன்பம் அஊத்தும் பெண்ணிடத்தில்தான் இருக்கிறது. அதற்குப் பிறகுதான் எல்லாம்" என்று தனக்குத்தாஜே பேசிக்கொண்டார். அங்கவஸ்திரம் போட்டுக் கொண்டு ஆடம்பரமாக வெளியே புறப்படும் நேரத்திலே வெள்ளி டம்ப்ளரில் சூடாக ஒரு கப் காபி கொண்டுவந்து புன்னகை பூத்த முகத்தோடு நீட்டிஞல், அந்த அன்புக் காட்சியின் இன்பநிலே என்னவாக இருக்கும் என்று சிந்தித்து மகிழ்வார்.

ஆஞல் கண்ணுடி முன் நின்று தன் வயதையும் தன் உள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்க்கும் கன்னியின் எழிலேயும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது வேற்றுமை என்பதற்கு விளக்கம் தருவது போன்றிருந்தது அவர் மனநிலே. "ஆஞல் என்ன?" என்று கண்ணுடியை விட்டுச் சற்றுத் தூரத்தில் வந்து நின்று கொண்டு அவர் வாய் விட்டுச் சொல்ல ஆரம்பித்தார். "இதெல்லாம் பார்த்திருந்தால் அந்தக் காலத்திலே தசரத மன்னன் அத்தஊப் பேரை

மணஞ் செய்திருக்க முடியுமா? பல அரசர்கள் வரலாறே வேறு விதமாக அல்லவா முடிந்திருக்கும். அவள் என் மனைவி. அவள் என்னால் இன்பம் அடையாமல் இருக்கலாம். ஆனால் நான்......" அதற்குமேல் சிந்தனை போகக் கூடாத தூரத்திற்கு அவர் கற்பனை செல்லத் தொடங்கிற்று.

அந்தக் கற்பனையின் வேகம் அவள் இருந்த தனியறைக்கு அவரைக் கொண்டு சென்றது. திருமணம் ஆகி ஆறுமாதங்களானாலும் அன்றுதான் அவருக்கு 'முதல் இரவாக' இருந்தது. தங்கத்தின் கருவிழிகள் அவர் உள்ளத்தைத் தொடும் மலரம்புகளாக இருக்கும் என எண்ணிக் கொண்டே வந்தார்.

ஆனால் அவர் கதவருகில் வந்தவுடன் யாரோ அவளோடு பேசுவதுபோல இருந்தது. அந்தக் குரல் எங்கேயோ கேட்ட மாதிரியும் இருந்தது. "தங்கம்! இப்பொழுது நீ இன்னொருவரின் மனைவி. இதை மறந்து விடாதே" என்று அந்த ஆடவனின் குரல் இவர் காதில் விழுந்தது.

உண்மையில் அவன் கண்ணியம் நிறைந்தவனாகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணும்பொழுது அவ்வெண்ணம் கோடையில் அகப்பட்ட குளிர் நிழல் போல இருந்தது.

"அதெல்லாம் முடியாது. நான் உங்களைத் தவிர......" என்று அவள் இறுத்த விடை திடுக்கென்று அடிக்கும் மின்சாரத் தாக்குதல் போல இருந்தது.

அமைதி அவரை விட்டு அகன்றது. சீற்றமும் சிந்தனையும் கோடையில் வீசும் வெம்மையான காற்றுப் போல அவரிடம் இயங்க ஆரம்பித்தது. "தட தட" என்று கதவைத் தட்டினார். கதவு சீக்கிரம் திறக்கப்படவில்லை.

சந்தேகம் வலிவு பெற ஆரம்பித்தது. "தங்கம்! தங்கம்!" என்று உரக்கக் கத்திக் கதவைத் தட்ட ஆரம்பித்தார். அவர் மீசை துடிக்க ஆரம்பித்தது.

சிறிது நேரத்தில் கதவைத் திறந்தாள். நேரே விர்ரென்று விரைவாக உள்ளே நுழைந்தார்.

"சீதா! அடிக்கடி வந்து போ" என்று தங்கம் மற்ருெரு பெண்ணை வழிக் கூட்டி அனுப்பிஞள். சீதாவும் தலையசைத்து விட்டுப் போய் விட்டாள்.

அவர் நாலா பக்கமும் தேட ஆரம்பித்தார். "என்னங்க! பொடி டப்பியைத் தேடுறீங்களா. இங்கே நீங்க வரவே இல்லையே!" "அதெல்லாம் ஒண்ணுமில்லே" என்று வியர்வைத் துளிகளைத் துடைத்துக் கொண்டு சோபாவில் உட்கார்ந்தார்.

"இப்பொழுது ரேடியோவிலே ஒரு நாடகம் நடந்தது. நானும் சீதாவும் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தோம். ஆகா! எவ்வளவு சுவாரஸ்யமாய் இருந்தது தெரியுமா அந்த நாடகம்!"

"என்ன! என்னிடத்திலேயே மறைக்கப் பார்க்கிருயே நீ!"

"நான் ஏன் மறைக்கிறேன்? வேணுமென்ருல் சொல்கிறேன் கேளுங்க. பாவம்! ஒரு பெண், தனக்குப் பிடிக்காத ஒருவரைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டி இருந்தது. இரண்டாந்தாரமாகக் கலியாணம் செய்து விட்டார்கள். பாவம் அவள் சிந்தும் கண்ணீருக்கு அளவே இல்லே.

'எனக்கு என் உரிமைப்படி வாழ உரிமை இல்லையா' என்று தான் அவள் கேட்கிருள். அப்பொழுது அந்தக் கிழவன் அவள் உணர்ச்சியைப் பற்றிச் சிறிதுகூடத்

தெரிந்துகொள்ளாமல் அவளிடம் இன்பத்தை எதிர் பார்க்கிருன்.

'அதைவிட ஒரு பொம்மைக்கு அழகான சேலேயுடுத்திக் “கண்ணே! கருமணியே! மண்ணே! அதன்மேல் இருக்கும் அழகான நிறமே! என்று, அதனோடு நீங்கள் கொஞ்சிக் குலாவலாமே!' என்று அவள் கேட்க ஆரம்பிக்கிருள்.

அவர், 'அதெல்லாம் எனக்குத் தெரியாது. என் தங்கக் கட்டியல்லவா நீ; என் கட்டாணி முத்தே! நான் உன்னைத் தொடாமல் தாலி கட்டி விட்டேன். நீ என் மனைவி. இப்பொழுது தொட்டு உன்னை ... ...' என்று, தொட்டும் தொடாமலும் பேச ஆரம்பிக்கிருர்.

'ஏ! கிழட்டுப் பிணமே! என் உரிமையைப் பறிக்க நீ யார்? எனக்கு விருப்பமில்லை என்ருல் நீ யார் என்னை வற்புறுத்த' என்று வேகமாகப் பேச ஆரம்பிக்கிருள் அவள்.

'அய்யே! கோவிச்சிக்காதே, நீ எது வேணுமாஞலும் கேள் நான் தருகிறேன். நீ மட்டும் கொஞ்சம் ... ... என் கண்ணு இல்லே மூக்கு இல்லே அது இல்லே இது இல்லே' என்று கெஞ்சிக் கூத்தாடிக் கொஞ்சிப் பேசி அவளிடத்தில் தஞ்சமென நண்ணிஞல், அவளைத் தொட ஆரம்பிக்கிருர்.

அவளோ அவர் நிலைமைக்குப் பரிதாபப் பட்டு வேறு வழியில்லாமல் ... ... என்று சொல்லும்பொழுது, “ஆ அப்படியா!” என்று சந்தோஷத்தால் தனசேகரர் கேட்கத் தொடங்கிஞர். “பளீர் என்று ஒரு அறை கொடுக்கிருள் அந்தக் கிழவரின் கன்னத்தில். அப்பொழுதுதான் அந்தக் கிழவனுக்குக் கொஞ்சம் புத்தி வருகிறது” என்று கதை சொல்லிக் கொண்டே போஞள்.

“மிகவும் பொல்லாதவளாக இருக்கிருளே” என்று தனசேகரர் தன் அபிப்பிராயத்தைச் சொல்ல வாயெடுத்தார்.

“அதைத்தான் நான் உங்களுக்குச் சொல்ல வந்தேன். நீங்களே சொல்லி முடித்து விட்டீர்கள்.”

தனசேகரரின் சப்த நாடியும் அடங்கி விட்டது என்று தான் சொல்லமுடியும். உணர்வற்ற நிலேமையில் இன்னது பேசுவது என்று தெரியாமல் கதையின் தொடர்ச்சியில் அக்கரை யில்லாவிட்டாலும் ‘அப்புறம்’ என்று கேட்க ஆரம்பித்தார்.

“அடுத்த காட்சியாக அவள் காதலன் வருகிருன். அவனேயே மணஞ் செய்து கொண்டு வாழ உறுதி பூண்டிருந்தாள். செல்வம் (விதி) வேறு விதமாக முடித்து விட்டது. ஆனலும் அவள் விதியை வெல்ல வேண்டுமென்று தீர்மானிக்கிருள். அதனல் அவள் அவனேத்தன் வீட்டிற்கு வருமாறு ஏற்பாடு செய்து சந்திக்கிருள்” என்று சொல்லும்பொழுது தனசேகரர் ஓரளவு ஆத்திரத்தோடு, “அப்பொழுது அந்தக்கிழவன் அவர்களே விட்டுவிட்டான?” என்று கேட்க ஆரம்பித்தார்.

“விடாமல் என்ன செய்வது? அதிகமாகப் போனல் அவனேடு அப்பொழுதே வெளியேறிவிடுவேன். நீ என்னே என்ன செய்ய முடியும்?” என்று கேட்கிருள்.

“அந்தச் சீதா தான்” என்று வாயெடுக்க ஆரம்பித்தார்.

“ஆமாம். அவளும் நானும்தான் அந்த நாடகத்தை ரசித்துக் கொண்டிருந்தோம். நிரம்பவும் சுவாரஸ்யமாய் இருந்தது. அந்த நாடகத்தில் அப்படியே ஆழ்ந்து விட்

டோம். அதனுல்தான் நீங்கள் கதவு தட்டியதுகூடக் கேட்கவில்லே."

அதற்குமேல் அவருக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லே.

" ஊம் நான் வர்ரேன். எனக்கு எங்கே பொழுது இருக்கிறது இதை யெல்லாம் ரசிக்க" என்று மழுப்பிவிட்டு வேறு வழியில்லாமல் வந்த வழியே திரும்பிப் போனுர்.

" அவள் நம் வழிக்கு வருகிற வரைக்கும் நாம் அவசரப்பட்டு மரியாதையைக் கெடுத்துக்கொள்ளக்கூடாது." என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டார். காய் பழுத்தது. ஆனுல் பயன் ? கனி கைக்கு எட்டவில்லே. அடித்தால் மற்ருெருவர் தோட்டத்தில் விழுந்தாலும் விழுந்துவிடும். தானுக விழுமா ? இந்தக் கேள்விதான் அவர் மனத்தில் தோன்றியது. " விழாமல் என்ன ? அதற்குள் 'அவன்' பறித்துக்கொண்டால் ? ஆம் யார் அவன் ? அவனே இங்கு வாழமுடியாதபடி செய்யவேண்டும். இங்கேயிருக்கிற வேலேயாட்கள் கட்டாயம் அவளுக்கு உதவியாகத்தான் இருந்திருக்கவேண்டும். அதுதான் சரியான வழி" என்று பல வகையாக எண்ணிக்கொண்டு தன் வியாபார அலுவலகத்தை நோக்கிச் சென்ருர்.

தங்கம் அந்த இளேஞனை 'சீதா' தன்னிடத்தில் கொடுத்து விட்டுப்போன வாரப்பத்திரிகையை ஆழ்ந்து படிக்கத் தொடங்கினுள். அதில் அந்த இளேஞன் 'சீதா' என்ற புனேப்பெயரில் எழுதிய மணல்வீடு என்ற சிறு நாடகத்தை அவளேப் படிக்குமாறு சொன்னுன். அதில் அந்த இளேஞனின் கடந்தகால வாழ்வின் விளங்காத பகுதிகள் பல அமைந்து கிடந்தன. அவற்றைப் படிக்கத் தொடங்கினுள் தங்கம்.

அதில் வரும் பாத்திரங்களில் தன்னையும் சுந்தரத்தை யும் ஐக்கியப்படுத்திக் கொண்டு படித்து அனுபவிக்கத் தொடங்கினாள்.

(1)

[ஆற்றங்கரை]

அழகான ஒருத்தி மணல்மேட்டில் உட்கார்ந்து கொண் டிருக்கிறாள். அங்கே அவளருகில் ஒரு வாலிபன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். இருவரும் மணல்கோபுரம் ஒன்று எழுப்புகிறார்கள். அதற்குப் பக்கத்தில் இருவரும் :

**அவன் (சுந்தரம்) :** தங்கம்! இப்பொழுது நாம் கட்டியது

**அவள் (தங்கம்) :** மணல்வீடு. பிறகு உண்மையான வீடு.

**அவன் :** அதில் நீயும் நானும்......

**தங்கம் :** அடிக்கடி அபிப்பிராய பேதத்தோடு வாழ்வோம்.

**சுந்தரம் :** இல்லை. கருத்து வேறுபாடில்லாமல் வாழ்வோம். அதுதான் உண்மையான இல்லறம்.

**தங்கம் :** இதிலேயே நம்மிருவருக்கும் அபிப்பிராயபேதம் இப்பவே இப்படி இருக்கச்சே அப்ப மட்டும்!

**சுந்தரம் :** ஆமாம். ஒப்புக்கொள்கிறேன். கருத்துவேற்றுமை வளர்ச்சிக்கு அடிப்படை. இதை முதலிலேயே உணர வேண்டும். கருத்து வேற்றுமைக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். அதுதான் பண்பாடு.

**தங்கம் :** இது நம் எதிர்கால வாழ்வுக்கு முதல் பாடம்.

**சுந்தரம் :** இரண்டாவது!

**தங்கம் :** இடையிடையே நாம் பிரிந்து இருக்கவேண்டும். அட்டைகள்மாதிரி இரண்டுபேரும் ஒட்டிக்கொண்டு இருக்கக்கூடாது. அடிக்கடி என் தாய் வீட்டுக்கு என்னை அனுப்பிவிட வேண்டும். அப்பத்தான் வாழ்க்கையிலே சுவை தட்டாது.

**சுந்தரம் :** எப்பொழுதும் இணைபிரியாமல்தானே தம்பதிகள் வாழவேண்டும் என்று சொல்லுவார்கள்! அதற்கு மாறாக......

**தங்கம் :** அப்பொழுது சுவை தட்டிவிடும். பிரிவு இருந்தால் தான் சேர்ந்து வாழ்வதில் இன்பத்தை உணரமுடியும்.

**சுந்தரம் :** வெறும் இனிப்பு உடம்பைக் கெடுத்துவிடும் என்கிறாய். வேறே சுவையும்! ரொம்ப சரி.

**தங்கம் :** ஆமாம். அது இரண்டாவது பாடம்.

**சுந்தரம் :** இப்படிப் பாடம் படிப்பித்துக் கொண்டே இருந்தால் வாத்தியாரைப் பார்க்கிறமாதிரி உன்னை......

**தங்கம் :** இது மூன்றாவது பாடம். அடிக்கடி ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கூடாது. சுந்தரம்! இந்த மணல் வீடு பொல்லாதது. நம்மை எதிர்காலத்துக்குக் கொண்டு சென்றுவிட்டது.

**சுந்தரம் :** பத்து வயது அதிகம் கொடுத்துவிட்டது. மணல் வீடே நம்மை இப்படி நம் இளமை உள்ளத்தை முதுமை ஆக்கிவிட்டால்......

**தங்கம் :** உண்மையான வீடு எப்படி ஆக்கும் என்கிறாய்?

**சுந்தரம் :** அடங்காத குற்றவாளிகளைச் சிறையில் போட்டு அவர்கள் மனத்தைப் பண்படுத்துவது போல......

தங்கம் : இல்லை தவறு. அங்கே பண்படுத்துவது இல்லை. அங்கே மனத்தை ஒடுக்கி விடுகிறார்கள். இங்கே தான் பண்படுகிறது. இதுவும் ஒரு சிறை போலத்தான். ஆனால் அதில் நாமிருவரும் வசிப்பதால்

சுந்தரம் : அழகிய பூஞ்சோலையாகிறது. அந்தப் பூஞ்சோலை யில் இரண்டு பறவைகள் ஒன்றை ஒன்று அணைத்துக் கொண்டு அலகுகளால் முத்தமிட்டு எல்லையில்லா.

தங்கம் : [இன்பநிலை அடைகிறது. (என்று கூறிவிட்டுச் சிரிக்கிறாள்) சொல்லி முடித்துவிடுங்கள்.

சுந்தரம் : தங்கம்! நமக்கு மணல் வீடு வேண்டாம். உண்மை யான வீடு வேண்டும். அதற்குத்தான் நான் உன்னை விட்டுப் பிரியத் தீர்மானித்திருக்கிறேன். அதற்கு அவ சியம் வந்திருக்கிறது.

தங்கம் : அப்படியானால் நான் எப்படி.

சுந்தரம் : பார்த்தாயா! பிரிவு கட்டாயம் வேண்டும் என்றாயே? அதற்குள் நீ கற்றுக் கொடுத்த பாடத்தை நீயே.

தங்கம் : அது அப்படித்தான். சொல்வது எளிது.

சுந்தரம் : ஆசிரியரே! தாங்களே! இப்படிப் பாடத்தை மறந்துவிட்டால் சீடனாகிய நான் ?

தங்கம் : நீங்களும் மறந்துவிடுங்கள். போ சுந்தரம்! விளையாட்டுத்தான் பெரிசா இருக்குது. நீ எங்கே போகப் போகிறாய்? வேண்டாம். நானும்.

சுந்தரம் : அம்மாடி! நீயுமா? சரிதான். நான்போய் உத்தி யோகம் சம்பாதிச்சிகிட்டு இன்னும் ஒரு வாரத்திலே வந்து விடுகிறேன். அப்புறம் பெரியவங்க தீர்மானிக் கிறமாதிரி நடந்துகொள்ளலாம். அதுதான் கலியாணப் பேச்சு.

**தங்கம் :** அப்பொழுது கட்டாயம் ஒருவாரத்திலே திரும்பி வந்துவிடவேண்டும். தெரிகிறதா !

**சுந்தரம் :** பார்த்தாயா ! வாத்தியார் மாதிரி கட்டளை இடு கிருயே இது நியாயமா !

**தங்கம் :** இல்லே. உன் தங்கம் தன் இதயத்தில் உள்ள உணர் வைக் காட்டுகிருள்.

**சுந்தரம் :** தங்கம் ! கட்டாயம் வந்துவிடுகிறேன். வேலே கிடைத்ததும் உடனே ஒரே வாரத்தில் வந்துவிடு கிறேன்.

**தங்கம் :** கட்டாயம் ! ஊம் !

(இருவரும் கைகோர்த்துக் கொள்ளாமல் அந்த மணல்வெளியில் நடக்கிருர்கள்.]

## (2)

[சுந்தரம் சென்னையில் ஒரு கம்பெனி அதிகாரி முன் தன் சர்ட்டிபிகேட்டுக்ளைக் காட்டுகிருன்.]

**அதிகாரி :** உன் பெயர் ?

**சுந்தரம் :** சுந்தரம்.

**அதிகாரி :** நீ ஏன் அதிக மார்க்கு வாங்கவில்லே ?

**சுந்தரம் :** என்னைப் போல எவ்வளவோ பேர் இருக்கிருர் கள். ஒரு சிலர்தான் அதிக மார்க்கு வாங்குகிருர்கள். அவர்கள் சிறுபான்மையோர்தான்.

**அதிகாரி :** அதைக் கேட்கவில்லே. உன்னைப் பற்றித்தான் கேட்கிறேன்.

**சுந்தரம் :** என்னைப்பற்றித்தான் சொல்கிறேன். பெரும் பான்மையோர் என்னைப் போலத்தான் இருக்கிருர்கள். நூற்றுக்கு ஒருவர்தான் நீங்கள் சொல்வது போல

அதிக மார்க்கு வாங்கமுடியும். எதையும் அந்த ஒருவரைக் கொண்டே நிர்ணயிக்கக் கூடாது. தொண்ணூற்றென்பது பேரை மனத்தில் வைத்துக்கொண்டு தான் முடிவு கட்டவேண்டும். அதுதான் நியாயம். அதிலும் பொதுஸ்தாபனங்கள் இந்த அடிப்படையை மேற்கொள்ள வேண்டும்.

**அதிகாரி :** சரிதான். இந்த மாதிரி பேசுகிறவர்களுக்கு உத்தியோகம் தகுதி இல்லை தம்பி! தேர்தலில் நின்று இதெல்லாம் சட்ட சபையில் பேசவேண்டும்.

**சுந்தரம் :** மனம் நொந்து பேசுகிறேன். மார்க்குகள் குறைவாக வாங்கிவிட்டேன் என்ற காரணத்தால் என்னைத் தகுதியற்றவன் என்று நீங்கள் மட்டுமல்ல எத்தனையோ பேர் தள்ளிவிட்டார்கள். அதனால்தான் மனம் நொந்து பேசுகிறேன்.

**அதிகாரி :** இந்தி படித்திருக்கிறாயா!

**சுந்தரம் :** தமிழன் இந்தி படிக்க முடியாது. அவன் மொழிப் பண்பாடு வேறு. சமஸ்கிருதமோ பெர்ஷிய மொழியோ கலந்துள்ள மொழியைக் கற்க இடந்தராது. அதனால்தான் என்னாலும் படிக்க முடியவில்லை.

**அதிகாரி :** இந்தி நன்றாகத் தெரிந்திருந்தால் அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்று மேலிடத்திலிருந்து உத்தரவு. எங்கக் கம்பெனி முதலாளி அந்த மாதிரி எண்ணம் உடையவர்.

[மற்றொருவன் உருவம் மெலிந்து மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டு சாதாரண தோற்றத்தோடு வருகிறான். அவன் உறையில் போட்ட சிபாரிசுக் கடிதம் ஒன்று தருகிறான்.]

**அதிகாரி :** நீ இந்தி படித்திருக்கிருயா?

**புதியவன் :** ஜீ ஹாங்! முஜே ஹிந்தி மாலும் ஹை. அதனுல் தானே அவர் சிபாரிசு பண்ணி இருக்காரு.

**அதிகாரி :** அச்சா! வேலை யெல்லாம் ஒழுங்கா....

**புதியவன் :** உங்களுக்குக் கீழ்ப்படிந்து காலாலே சொன்ன வேலையைத் தலையாலே செய்வேனுங்க.

**அதிகாரி :** கையாலேயே செய்தால் போதும். தம்பீ! (சுந்தரத்தைப் பார்த்து) இந்த மாதிரி ஆள்தான் வேணும். (அவனைப் பார்த்து) சரி! உனக்கு ஆர்டர் அனுப்புகிறேன் நீ போ. சுந்தரம்! நீயும் போய்வா.

**சுந்தரம் :** நான் வருகிறேன். எனக்கு வாழத் தகுதியில்லையா?

## (3)

**சுந்தரம் :** நான் வாழத் தகுதியற்றவன். ஒன்று சொத்து இருக்க வேண்டும்; அல்லது நல்ல தொழில் இருக்க வேண்டும். இவர்களுக்குத்தான் வாழ்க்கை. என்னைப் போன்றவர்கள் வாழ முடியாது. போட்டி உலகத்தில் என்னைக் கட்டாயம் தள்ளிவிடுவார்கள். கடைசி நம்பிக்கையும் இழந்து விட்டேன். ஆம். சாகிறேன். அதுதான் வழி. அப்பொழுது அவள்? ஆம். அவள் என்னை மறக்க வேண்டும், சொத்துள்ளவனை மணக்க வேண்டும் இதுதான் முடிவு. அப்பொழுது உன் காதல்? பணம் இல்லாத இடத்தில் காதல் வாழாது.

[தபாலில் ஒரு கடிதம் வருகிறது. படிக்கிருன்.]

அவளுக்கும் திருமணம் ஏற்பாடு ஆகிவிட்டது. நல்லது தான். (மறுபடியும் தொடர்ந்து படிக்கிருன்) பாவம்!

எனக்கு வேலை கிடைத்துவிட்டது என்ற நம்பிக்கையால் உடனே வந்து அழைத்துப் போகச் சொல்கிருள் !

[பக்கம் திருப்புகிருன் ; வாய் விட்டுப் படிக்கிருன்.]

" நீங்கள் வரவில்லையென்ருல் என் பிணம் கிணற்றில் மிதக்கும். இது உறுதி."

## (4)

## எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன்

அவன் (சுந்தரம்) வண்டியில் ஏறுகிருன். நெருக்கடி அதிகமாக இருக்கிறது. பிக்பாக்கட் ஆள் ஒருவன் இவன் மணிபர்சை எடுத்துக்கொண்டு ஓடும் ரயிலில் அடுத்த வண்டிக்குத் தாவுகிருன். அவன் தவறி விழுந்து விடுகிருன். விழுந்தவன் பலத்த காயத்தோடு இறந்து விடுகிருன்.

வழியில் செங்கல்பட்டில் டிக்கட் பரிசோதகர் சுந்தரத்தை டிக்கட் கேட்கிருர். அப்பொழுதுதான் மணிபர்சு போனதை உணர்கிருன்.

**சுந்தரம் :** ஐயா ! நான் டிக்கட் வைத்திருந்த பர்ஸை எவனே எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

**டிக்கட் பரிசோதகர் :** அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. அது போலீஸ் டிபார்ட்மெண்டு கவனிக்க வேண்டிய விஷயம். எங்களுக்கு வேண்டியது டிக்கட்டு. கீழே இறங்கு.

[சுந்தரம் எவ்வளவோ கேட்டுப் பார்க்கிருன். எதிர்த்தும் பார்க்கிருன். போலீஸ்காரர் வசம் ஒப்புவிக்கப்படுகிருன்.]

(5)

மாஜிஸ்திரேட்டு : டிக்கட்டு இல்லாமல் பயணம் செய்த தற்காக மூன்று நாள் சிறை.

(6)

[விடுதலை அடைகிருன். வெளியே பத்திரிகை ஒன்று படிக்கிருன்.]

"சென்னைக்கு வேலை தேடிவந்த திருச்சியைச் சார்ந்த சுந்தரம் என்ற ஓர் இளைஞன் மனமுடைந்து ரயிலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டான்."

"ஆம், தற்கொலை செய்து கொண்டேன். என் சர்ட்டிபி கேட்டும் பேட்டிக் கடிதமும் அந்தப் பர்ஸில் இருந்தது."

[திருச்சியில் அவர்கள் கிராமத்தில் ஏதேனும் தற்கொலை நடந்திருக்கிறதா என்று செய்திகளைப் புரட்டிப் பார்க்கிருன்.]

"இல்லை. அவள் சாகவில்லை. திருமணம் கட்டாயம் நடந்திருக்க வேண்டும். அவள் வாழவேண்டுமானுல் நான் சாகத்தான் வேண்டும். நான் இப்பொழுது செத்து விட்டேன். நல்ல முடிவு."

(7)

ஆற்றங்கரையில் அவர்கள் கட்டியிருந்த மணல் வீட்டை நீர் அலைகள் வந்து கரைத்து விடுகின்றன.

*    *    *

இந்தக் கதையைப் படிக்கும் பொழுதுதான் அவளுக்குச் சுந்தரம் ஏன் வந்து அழைத்துப் போகவில்லை என்ற உண்மை விளங்கிற்று.

# [ 7 ]

தங்கத்தைச் சந்தித்துப்போன பிறகு சுந்தரத்தின் மனத்தில் பெரிய போராட்டம் நிகழ்ந்தது. உலகத்தில் நான் இல்லாதபடி பத்திரிகைச் செய்தி ஆக்கிவிட்டது. நான் தற்கொலை செய்து கொண்டேன் என்ற செய்தி தங்கத்தைப் பைத்தியமாக்கிவிட்டது..

'அன்றைய தினம் பிக்பாக்கட் ஆள் என் ஜேபியில் இருந்த மணிபர்சை எடுத்த நிகழ்ச்சி சாதாரணமான நிகழ்ச்சிதான். ஆனால் அதன் முடிவு தங்கத்தைப் பைத்திய மாக்கிவிட்டது. அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதால் நான் துறவியைப்போல் நடித்து உயிரோடு இருக்கிறேன் என்று உணர்த்த வேண்டியிருந்தது. அவள் பைத்திய நிலையும் மாறியது.

அதோடு என் கடமை முடிந்துவிட்டது என்று ஆறுதல் கொண்டேன். ஆனால் அவள் உள்ளத்தில் காதல் அணையா விளக்காக ஒளி விட்டுக்கொண்டிருப்பதுதான் என் மனப் போராட்டத்திற்குக் காரணம். அவள் இன்பமாக வாழ வேண்டுமென்று எத்தனை பெரிய தியாகம் செய்யவும் முற்படுகிறேன். ஆனால் அவள் மணமானவள். அவள் வாழ்க்கையில் நான் எந்த வகையிலும் தடையாக இருக்கக் கூடாது.

நான் என்ன செய்ய முடியும்? அவள் பிடிவாதமாக இருக்கிறாள். ஆண்களிடத்தில் ஒரே ஒரு குறையிருக் கிறது. காதலையும் தியாகம் செய்யக்கூடிய அவ்வளவு தீவிர

புத்தி இருக்கிறது. அது கூடாது என்கிருள். பெண்கள காதலுக்காக எதையும் தியாகம் செய்யும் மனப்பான்மை உடையவர்கள் என்கிருள். நான் எவ்வளவு சொல்லியும் அவள் பொருட்படுத்துவதாக இல்லே. மிகவும் சிக்கலான சந்தர்ப்பங்களில் நான் அகப்பட்டுக்கொள்ள இருந்தேன். அன்றைய தினம் அவள் சேலேயை எனக்கு உடுத்தி என்னே வெளியே அனுப்பவில்லே யென்ருல் நிலேமை நெருக்கடியாக முடிந்திருக்கும்.

வேண்டாம். என்னே மறந்துவிடு. நிம்மதியாகக் குடித்தனம் செய்துகொண்டிரு என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். கேட்பதாக இல்லே. வறுமை தாண்டவமாடும் இந்தச் சமுதாயத்தில் ஒன்று. நான் கூலியாளாக மாறி உழலவேண்டும். இல்லே, திருடி ஒரு நாளேக்குச் சிறையின் கம்பிகளே எண்ணிக் கொண்டிருக்க வேண்டும். இந்த நேர்மையான வழிகளே விட்டுவிட்டால் சாமியாராகவோ ஜோசியராகவோ போலி அரசியல் வாதியாகவோ மதப் பிரச்சாரகஞகவோ மாறித் தந்திரமாக வாழ்க்கை நடத்த வேண்டும். ஏழையாகப் பிறந்தது பெரிய குற்றம். ஓர் அபலேயினிடத்தில் காதல் கொண்டு அவள் வாழ்க்கையைப் பாழ்படுத்தியது அதைவிடப் பெரிய குற்றம். இனி அவளே மனேவியாகக் கொண்டு, அவள் நிம்மதியான வாழ்வைக் குலேத்து, அவளேயும் துன்பத்தில் ஆழ்த்துவது மன்னிக்க முடியாத குற்றம். இவையனேத்தையும் உணர்கிறேன். அவளுக்கும் சொல்லிப் பார்க்கிறேன்.

என்னே மறந்துவிடும்படி மன்ருடினேன். 'உங்கள் காதலுக்காக இறந்தாள் என்று என் சமாதியில் எழுதுங்கள். அது போதும்' என்று வற்புறுத்துகிருள். இந்த நிலேமையில் நான் என்ன செய்ய முடியும்? மணமாகுமுன் அவள் நிலேமை வேறு. வீட்டை விட்டு வெளியேறிப் பிறகு பதிவுத் திருமணம் செய்துகொண்டிருக்கலாம். இப்

பொழுது எங்கள் நிலைமை வேறு. வெளியேற முடியாது. மற்றொருவன் மனைவியைக் கடத்திச் சென்ற குற்றம்!

எந்த வகையிலும் நான் நிம்மதியாக வாழமுடியாது. அவர்கள் குடும்பத்தில் நான் அடிக்கடிச் சென்று அந்த வாழ்வைக் கெடுக்கக் கூடாது. கள்ளத்தனமாக அவளிடத்தில் தவருக நடந்துகொள்வதால் பயன் என்ன? அதனுல் எங்கள் காதல்வாழ்வு செழிப்பதற்குக் கொஞ்சங்கூட வழியில்லை. அது மிகவும் கீழ்த்தரமான செயல். அதனுல் எங்களுக்கு நிலைத்த வாழ்வு இல்லை. ஏதோ சிலகாலம் காதல் இன்பத்தோடு கவலையில்லாத உள்ளத்தோடு வாழ்ந்தோம். அந்த இன்ப நினைவுகளோடு அமைதி கொண்டு எதிர்கால வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டியது. அதுதான் நன்மை. ஆனுல் அவளுக்கு இந்த அமைதி ஏற்படவில்லை. ‘சுந்தரம்! நீ பக்கத்தில் இருந்தால் போதும். வேறென்றும் வேண்டாம்’ என்கிருள். ஆனுல் அதில் எனக்கு நம்பிக்கை இல்லை. அருகிலிருந்தால் மறுபடியும் உள்ளத்தைக் கட்டுப்படுத்த யாராலும் முடியாது. இயற்கை எங்களைவிட வன்மை வாய்ந்தது.

ஒரு நாளைக்கு விடுதலை கிடைக்கும் என்று அவள் அசையாத நம்பிக்கை கொள்கிருள். இல்லை அந்த லட்சியத்துக்காக வாழ்ந்து அழியாத அமரவாழ்வு வாழ்வோம் என்று உறுதி கொண்டிருக்கிருள். லைலாமஜ்னுவின் வாழ்க்கையின் அந்தச் சோகத்திலாவது நாம் அமைதி அடையக் கூடாதா என்று கேட்கிருள். அனுர்கலியின் அமர வாழ்வை யாவது சிந்தித்துப்பார் என்று கேட்கிருள். இப்படி ஏன் நாமும் முயன்று வெற்றி தோல்வி இரண்டில் ஒன்று அடையக்கூடாது என்று கேட்கிருள்.

அவளுக்காக நான் மட்டும் ஏன் துணிவு கொள்ளக் கூடாது! சமூகத்தில் எனக்கு வேலையில்லை. நான் வாழத்

தகுதியற்றவன் என்று தள்ளிவிட்டது. தற்கொலை எண்ணத்தை மேற்கொண்டதால்தான் இவ்வளவு அழிவுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தத் தீமையைப் போக்க நான் ஏதாவது முயற்சி செய்தேனு? வேலையில்லை என்றவுடன் தற்கொலை செய்துகொள்ள எண்ணினேன். அதற்குமாருக அந்த அதிகாரியைத் திருத்த ஒரு அறை யாவது கொடுத்திருந்தால் புதிய உலகம் அமைக்க ஒரு அடியாவது அடிவைத்திருக்கமாட்டேனு! நான் செத்திருந் தால் சாதாரண செய்தியாக மறைந்திருக்கும். அந்த அதி காரிக்கு ஒருஅறை பட்டிருந்தாலும் அது சமூகத்தின் சிந்தனையைத் தூண்டியிருக்கும்; கொட்டை எழுத்துக்களில் செய்தி பறந்திருக்கும்; அதனை நான் செய்யவில்லை. நான் கோழையாக வாழ்ந்துவிட்டேன்.

அவள், 'நாம் எப்படியும் வாழவேண்டும்' என்கிருள். நான் வேண்டாம் என்கிறேன். அவளுடைய எண்ணம் உயிர்ச்சக்தி வாய்ந்தது. என்னுடைய எண்ணம் வலிமை யற்ற எண்ணம். அஞ்சி ஒதுங்கி வாழ எண்ணும் எண்ணம். அதற்குத்தான் தியாகம் என்ற தவருன பெயரைக் கொடுக் கிறேன். ஏன் நாங்கள் மறுபடியும் மணஞ்செய்துகொண்டு வாழக்கூடாதா? புதியதோர் மாற்றத்தை ஏன் செய்யக் கூடாது. இந்தச் சமுதாயத்தின் நியாய ஒழுங்குகளை மீற அஞ்சலாம். அது பயன்தராமல் இருக்கலாம். ஆனுல் சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே என் காரியத்தை ஏன் சாதிக்கக் கூடாது?

'சுந்தரம்! நீ வா! எப்படியாவது எங்கள் வீட்டில் தங்க வழிப்படுத்திக்கொள். பிறகு பார்த்துக்கொள்ளலாம்' என்று சொல்லுகிருள். அதை ஏன் செய்யக்கூடாது. அவள் வழிதவறி நடக்கின்ருள் என்று உலகம் சொல்லுமே என்று நினைக்கிருய். என்னிடத்தில் காதல்கொண்டு நாங்கள் வாழ்ந்தது தெரிந்தால் இப்பொழுது அவள் வழி

தவறி நடக்கிறாள் என்றோ அப்பொழுது வழி தவறி நடந்தாள் என்றோ சொல்லமாட்டார்களா? உலகம் எப்படியும் சொல்லும். அதனால் கவலையில்லை. லட்சியத்துக்கு மாறுபடாமல் வாழ்ந்தால் போதும். அதுதான் பயனுடைய வாழ்க்கை. ஆம். அவள் சொல்வதுபோல் செய்வதுதான் சரி. எங்களுக்கு விடுதலை வேண்டும், கண்ணியமாக வாழ வேண்டும்.

அவள் என் மனைவி. இன்னொருவன் மணம் என்ற தண்டனை விதித்துக் குடும்பம் என்ற சிறையில் வைத்திருக்கிறான். அது காவலும் கட்டுப்பாடும் மிகுந்த சிறை. அவளை மீட்பது என் கடமை. அதுதான் என் வாழ்க்கை. அதிகமாகப் போனால் நாங்கள் காதலர்கள் என்று ஊரறியச் சொல்லி வெளியேறுவோம். அவ்வளவுதானே' என்று தனக்குள் கூறிக்கொண்டு துணிவு கொண்டவனாகக் காணப்பட்டான்.

## [ 8 ]

சுந்தரம் தனசேகரர் வீட்டிற்கு வந்தான். அவரால் அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. தனசேகரர், வீட்டின் முற்றத்தில் சோபாவில் உட்கார்ந்துகொண்டிருந்தார். வீட்டில் வேலையாட்களை நிறுத்துவது பற்றி யோசனை செய்துகொண்டிருந்தார். பழைய ஆட்களின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவிட்டார். அவர்கள் ஒவ்வொருவராகக் காரணம் சொல்லப்படாமல் நீக்கப்பட்டு விட்டனர்.

“சார்! உங்களுக்குக் காருக்கு டிரைவர் வேண்டு மென்று கேள்விப்பட்டேன்” என்று சுந்தரம் வந்து கேட்டான்.

“ஆமாம். ஆனால் உனக்கு இதற்கு முன்” அதற்குள் தங்கம் அந்தப் பக்கம் வந்தாள்.

“இவன் வேண்டாங்க. ஆளைப்பார்த்தால் அவ்வளவு அனுபவம் உள்ளவனாகத் தெரியவில்லை. வேலைக்குத் தகுதி இல்லைங்க” என்று அவளாக அபிப்பிராயம் கூற ஆரம்பித்தாள். பிறகு அதில் அக்கரை காட்டாதவள்போல உள்ளே சென்றுவிட்டாள்.

“இவளுக்குப் பிடிக்காத ஆளாக இருந்தால்தான் அவன் நம் பேச்சைச் சரியாகக் கேட்பான்” என்று தனக்குள் எண்ணிக்கொண்டார்.

“சரி தம்பி! மாதம் ஐம்பது ரூபாய் தருகிறேன். சம்மதமானால் தெரிவி.”

“இந்தக் காலத்திலே அறுபது ரூபாயாவது இல்லையென்றால் நானும்”

“நீ என்ன ஒண்டி ஆள்தானே”

“இல்லைங்க ரெண்டு பேரு”

“ஓ! கலியாணம் ஆகிவிட்டதா, சரி. ஐம்பத்தைந்து கொடுத்துவிடுகிறேன்.”

அன்றுமுதல் தனசேகரரின் காரோட்டியாக ஆகிவிட்டான். அவன் வேடிக்கையாகக் கார் ஓட்டக் கற்றுக் கொண்டது இப்பொழுது பயன்பட்டதை எண்ணும் பொழுது அவனுக்குச் சிரிப்பு வந்தது.

காரில் பொதுவாகத் தனசேகரர் பின்சீட்டில் உட்கார்ந்து கொள்வார். எப்பொழுதாவது கோயில் குளங்களுக்குத் தன்னோடு தங்கத்தை அழைத்துச்செல்வார். அப்பொழு தாவது அவள் மனம் இசைந்து அவர் வழியில் திருந்து வாளா என்று எதிர்பார்த்துவந்தார். சில சமயங்களில் காலட் சேபங்களிலும் உட்காரவைத்துப்பார்ப்பார். அவர்கள் சொல் லுகின்ற பாகவத புராணக் கதைகளைக் கேட்டாவது அவள் மனம் பழமையில் செல்லாதா என்று எதிர்பார்த்தார். ரிஷி பத்தினிகளின் கதைகளைக் கேட்டாவது அவள் மனம் மாறாதா என்று அவர் ஏங்கினார்.

இந்தமாதிரி இடங்களுக்குப் போகும்பொழுது தங்கம் பின்சீட்டில் உட்கார்ந்து கொள்வாள். தனசேகரர் குறிப் பறிந்து முன்சீட்டில் உட்கார்ந்து கொள்வார்.

தங்கத்தை எதிர்த்துப்பேசி வழிக்குக் கொண்டுவர அவருக்கு உள்ளூர அச்சமாக இருந்தது. எங்கே அவள் எதிர்த்துப் பேசினால் தாய் வீட்டுக்குப் போய்விடுகிறாளோ என்ற பயம் அவருக்கு உள்ளூர இருந்தது. கண்காணாத இடத்தில் அவள் நடத்தையைக் கவனித்துக்கொள்ள முடி யாது என்ற அச்சத்தால் அடங்கிக்கிடந்தார். மேலும் அவளுக்கும் தனக்கும் உறவு இல்லை என்று உலகத்தாருக் குத் தெரிந்தால் தனக்குத்தானே அவமானம் என்று ஒரு வாறாகத் தன் மனத்தைச் சரிப்படுத்திக்கொண்டு உலகத் தார் கண்ணில் மட்டும் மனைவி புருஷன் என்ற அளவுக்கு நடந்துகொண்டால் போதும் என்ற நிலைக்கு வந்துவிட்டார்.

ஆனால் சினிமாவுக்கு அவள் போக விரும்பினால் உடன் போக அவருக்கு விருப்பம் இருப்பதில்லை. அங்கே அவர் வேறு இடத்திலும் தங்கம் ஓரிடத்திலும் உட்கார்ந்து கொண்டால் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதற் காக அவர் கவலைப்பட்டார். மேலும் சில சமயங்களில்

தெரியாதவர்கள், "உங்கள் மகளுங்களா, எங்கே கட்டிக் கொடுத்திருக்கிறீங்க" என்று கேட்டுவிடுகிறார்கள். அந்த மாதிரி நிலையில் அடையும் சிக்கலான நிலைமையைச் சமாளிப்பது அவருக்கு நிரம்பவும் கஷ்டமாய் இருந்தது. அதனால் தங்கத்தைத் தனியாகவே அனுப்பிவிடுவது. ஆனால் சுந்தரத்திடம் மட்டும் "ஜாக்கிரதையாக இருந்து அழைத்து வந்துவிடு" என்று தனியே சொல்லிவிடுவார்.

கார் மெல்லவே செல்லும். டிரைவர் சுந்தரம் 'ஓனர்' சுந்தரமாகவே மாறிவிடுவது உண்டு. சினிமாவிற்குப் போவதற்குப்பதில் பெரிய ஹோட்டல்களில் சில நேரங்கள் தங்கி விடுவதுண்டு. அங்கேதான் அவர்களின் எதிர்காலத்தைப்பற்றிய பேச்சுக்கள் அடிக்கடி நடந்துவந்தன.

"தங்கம்! இவ்வளவு அறிவு பெண்களுக்கு இருக்கக் கூடாது" என்பான் சுந்தரம்.

"கூடாதுதான், ஒப்புக்கொள்கிறேன். ஆனால் என் நிலைமையில் அது அவசியம்."

"நாம் தவறான வாழ்க்கை நடத்துவதாகப் பேசிக் கொள்ளமாட்டார்களா."

"அப்படிப் பேசிக்கொண்டால் நமக்குச் சீக்கிரம் விடுதலை கிடைக்கும்."

"நாம் தந்திரமான முறைகளைக் கையாள்வது தவறு அல்லவா?"

"இல்லையென்றால் எப்பொழுதோ நாம் அழிந்துபோய் இருக்கவேண்டும். பணம் அதிகாரம் இவற்றின்முன் நம் நேர்மை செல்லாது. உள்ளத்தில் தூய்மை இருக்கும்வரை உறுதியான நெஞ்சமும் தீரமிக்க செயலும் விளைதல் இயற்கைதானே. அவர் என்னை ஒதுக்கித் தள்ளவேண்டுமென்றுதானே எதிர்பார்க்கிறேன். அன்றே எனக்கு

விடுதலை. சாக்கடை ஓரத்தில் வாழ்ந்து மடிவதாயிருந்தாலும் நான் உரிமையோடு வாழ்ந்து மடியவேண்டும்."

இப்படிப் பலமுறை சந்தித்துப் பேசியதுண்டு. அன்றும் அதைப்போலச் சந்தித்தார்கள்.

"சுந்தரம்! நான் எவ்வளவு மாறுபட்டு நடந்தாலும் என்னை வெறுத்து அனுப்புவதாக இல்லை. நான் என்ன செய்வது?"

"அது எப்படிக் கட்டிய மனைவியை வெளியே அனுப்பி விடுவார்கள்?"

"ஏன் அவர் முதல் மனைவியை அனுப்பிவிடவில்லையா. பாவம்! வாழவேண்டுமென்று விரும்பியவளை வாழாதபடித் தன் தாய் வீட்டுக்கு அனுப்பிவிட்டாரே."

"ஏன் அப்படி?"

"அதுவா! பாவம்! அதுதான் எனக்கு ஆறவில்லை. எப்பொழுதோ ஒருமுறை திருடன் ஒருவன் அவர்கள் வீட்டில் நுழைந்தானும். வலிய அவளை..."

"ஐயோ பாவம்! அதற்கு அவள் எப்படிக் குற்றவாளி ஆவாள். தவறு அவன்தானே செய்தான். அவள் அவனிடம் பட்ட மனவேதனையைக் கணவன்தானே சொல்லி ஆற்றியிருக்கவேண்டும். அதற்குமாறுக வேதனைக்குமேல் வேதனை கொடுத்து அவளைத் தாய் வீட்டிற்கு அனுப்பி விட்டாரே அது பெரிய தவறு. கவுரவம் அவரை அப்படி ஆக்கிவிட்டது."

"ஆம். அதே கவுரவம் எனக்கும் விடுதலை கொடுக்கும். அதைத்தான் நம்பி இருக்கிறேன்."

"ஊஹூம். என்ன செய்தாலும் அவர் உன்னை முதல் மனைவியை அனுப்பியதுபோல அனுப்பிவிட மாட்டார்."

“ஏன்?”

“அழகு இளமை இரண்டும் கவுரவத்தை வென்று விடும்.”

“உறுதியும் நம் அறிவும் நம் கவுரவத்தைக் காப்பாற்றும். அதற்கு வேண்டிய திட்டத்தை நாம் வகுக்க வேண்டும்.”

இவ்வாறு இவர்கள் கடைசி முறையாகப் பேசிவிட்டுப் பிரிந்துவிட்டார்கள். இனி அவர்களுக்குத் தனித்துச் சந்திக்கவேண்டிய சந்தர்ப்பமும் அவசியமும் ஏற்படவில்லை.

## [ 9 ]

நான் பார்த்து வந்த இடம் நல்ல இடம்’மா”

“இருக்கப்பட்ட இடமா அப்பா!”

“சிங்கப்பூரிலே இருந்து நிறைய பணம் கொண்டு வந்திருக்கிறாராம்.”

“உங்க இஷ்டம்’பா.”

“நீ நல்ல பெண். அப்பா பேச்சைத் தட்டி நடக்க மாட்டாய் என்று தெரியும். அந்தத் தங்கம்மாதான் அப்பா பேச்சைக் கேட்காமல் அந்தச் சுந்தரத்தின்மீது ஆசைப் பட்டுப் பைத்தியக்காரி ஆகிவிட்டாள். அந்தப் பிச்சைக் காரப்பையன் மீது ஆசைப்பட்டாள்; பைத்தியக்காரி ஆனாள்.”

“ இல்லே’ப்பா ! இப்போது தெளிவடைந்திருக்காங்க என்று கேள்வி. பாவம் ! அந்த அம்மா இஷ்டம் போல நடக்காமல் போய்விட்டது.”

“ நடந்திருந்தால் நம்மைப் போலக் குடிசை வீட்டை அடிக்கடி ஓலே மாற்றிக் கொண்டு இருக்கவேண்டும். பெரிய வங்க பேச்சைக் கேட்காவிட்டால் கட்டாயம் கஷ்டப்பட வேண்டும்.”

இவ்வாறு பேசிக்கொண்டது வள்ளியும் அவள் தந்தை முனியனும்.

அதன் முடிவு, அதே குடிசையில்,

“ வள்ளீ ! நான் எங்கே போகிறேன் என்று மட்டும் கேட்காதே ?”

“ நீங்கள் இப்படி இரவு நேரத்திலே வீட்டை விட்டுப் போகிறது எனக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லே. வழி யிலே திருடர்கள் மடக்கிக் கிட்டு ஏதாச்சியும் ”

“ சரிதான் சிங்கப்பூரு கண்ணன் என்ருலே திருட னுங்க எல்லாம் சலாம் போடுவாங்க. நீ ஒண்ணுக்கும் பயப் படாதே ”

என்று இவ்வாறு பேச்சு வார்த்தைகள் நிகழ்வதற்குக் காரணமா யிருந்தது என்று சொல்லலாம்.

சிங்கப்பூரு கண்ணன் தனக்குக் கணவனுகக் கிடைத் தது தனக்குப் பெரிய அதிர்ஷ்டம் என்றுதான் எண்ணி வந்தாள். அவன் அவ்வப்பொழுது வாங்கி வரும் புடவை களே அணிந்து குடிசையின் சுவற்றில் புதைத்திருந்த சிறு கண்ணுடியின் முன்னல் நிற்கும்பொழுது, அந்த உருவம் பழைய வள்ளியின் நிலேயைப் பார்த்துச் சிரிப்பது போன்றி ருந்தது. “ பார்த்தாயா வறுமைக்கும் செல்வத்திற்கும் உள்ள வித்தியாசத்தை ” என்று எடுத்துச் சொல்லுவது

போல இருந்தது. அந்த 'சில்க்' புடவை உடம்பில் படும் பொழுது அதன் மிருதுவான தன்மை அவளுக்குத் தனி ஒய்யாரத்தைக் கொடுத்தது.

ஆனால் தன் கணவன் ஒரு பெரிய திருடன் என்பது தெரிய வந்ததும், அவள் சந்தோஷமெல்லாம் ரயில்வே டிக்கட் பரிசோதகரைக் கண்ட பிச்சைக்காரனைப் போல எங்கேயோ மறைந்து விட்டது.

ஏழையாகப் பிறந்தாள் வள்ளி. ஆனால் இந்தச் செல்வந்தர்களின் வாழ்க்கையைக் கண்டு சில சமயங்களில் பெருமூச்சு விட்டதுண்டு. அதே நிலையில் அந்த அணிகளும் அழகுகளும் தன்னை மெல்ல வந்தடைவது கண்டு பெருமிதம் கொள்ள ஆரம்பித்தாள். ஆனால், தன் சுக வாழ்வு அஸ்திவாரமற்றது என்று உணர்ந்த அவள் அவற்றைத் துச்சமென எண்ணினாள்."

"நீங்கள் கொண்டு வருகிற பொருள்"

"ஆம் வள்ளி! பிறருடையது. உழைப்பினால் பொருளீட்டுகிறவன் என்றும் பணக்காரன் ஆனது இல்லை."

"நான் ஒப்புக் கொள்ள முடியாது. நீங்கள் செய்வது தவறு. அநியாயம்."

"ஆமாம். அநியாயம் தான். யாரும் நியாய அநியாயத்தை ஒட்டிக் காரியம் செய்து நான் பார்க்கவில்லை. அவசியத்துக்காகத் தான் நல்லதும் கெட்டதும் செய்கிறார்கள். என்னைத் தண்டிக்கும் நீதிபதிக்குக் கிடைத்த வசதிகள் எனக்குக் கிடைத்திருக்குமானால் நான் ஏன் திருடனாகிறேன். என்னைப் போலச் சூழ்நிலையில் விட்டுப் படிக்க வசதியற்றுக் கூலிவேலையிலும் சுரண்டப்பட்டு வாழ்க்கையிலே தோல்வி தவிர வேறு ஒன்றும் காணாமல் இருக்கும் எவனும் திருடத் துணிவது நிச்சயம். திருடனுக்குத் துணிவு கட்டாயம்.

வேண்டும். இல்லாத கொடுமை அந்தத்துணிவை அவ னுக்குக் கற்றுக் கொடுக்கிறது. அதனால் என்னைப் பழிக் காதே.''

"பழிக்கவேண்டாம் என்கிறீர்கள். ஆனால் நான் ஒரு திருடன் மனைவி என்ற பெயர் வாங்க விரும்பவில்லை.''

"சரிதான்! நான் அகப்படுகிற வரையில் என்னைத் திரு டன் என்று யாரும் சொல்லமுடியாது. அது வரையிலும் ஸ்ரீமான் சிங்கப்பூரு கண்ணன் மனைவிதான் நீ.''

இவ்வாறு இவர்கள் குடும்பத்தில் எப்பொழுதும் பேச்சு வார்த்தைகள் நடந்தவண்ணமிருந்தன. வள்ளியின் மனம் அமைதியை இழந்திருந்தது. இரவு நேரங்களில் சில சம யங்களில் 'திடு திடு' என்று ஓடிவந்து கதவு தட்டுவான்.

"வள்ளீ! வள்ளீ!'' என்று கதவு தட்டுவான். திடீ ரென்று தூக்கத்திலிருந்து எழுந்து கதவைத் திறப்பாள். "வெளியே போலீஸ் பீட்காரர்கள் போகிறார்கள். அவர்கள் என்னைத் துரத்தி வந்தார்கள். நல்ல காலம்'' என்பான். அப் படிச் சொல்லும்பொழுது அவன் உடல் அச்சத்தால் நடுங் கியது.

"இவ்வளவு அஞ்சி அஞ்சியா வாழவேண்டும். நிரம்ப வும் தைரியம் மிகுந்தவர்கள் என்று...''

"நீ நினைக்கிறாய். அப்படித்தான் பலரும் நினைக்கிறார் கள். அதனால்தான் எங்கள் வாழ்வை ஒருவிதமாக நடத்த முடிகிறது. நாங்கள் தைரியமாகப் பிழைப்பதற்குக் காரணம் ஜனங்களுடைய கோழைத்தனம்தான். வேறு ஒன்றும் இல்லை.''

ஜனங்கள் திருடன் திருடன் என்று கத்தினால் எல்லா ரும் சேர்ந்து பிடித்துக் கொள்ள மாட்டார்களா?''

“எல்லாரும் சேர்ந்து விடுவார்கள் என்று நீ நினைக்கிருய். அதுதான் இல்லே. அப்படிக் கத்திஞல்தான் எங்களுக்குக் கொண்டாட்டம். ஒவ்வொரு வீட்டுக் கதவையும் ‘டபக் டபக்’ என்று மூடிக்கொள்வார்கள். தெருவிலே ஒருவர் கூட நிற்கமாட்டார்கள்.”

“யாராவது தைரியமா உங்களே வந்து பிடித்து விட்டால்”

“அப்பொழுதும் பயம் கிடையாது. சாட்சி சொல்லுவதற்கு ஒருவரும் முன்னுக்கு வரமாட்டார்கள்.”

“அப்ப ஏன் பயப்படறீங்க”

“போலீசார் பிடித்துக்கொண்டால் அவர்கள் எப்படியாவது சாட்சிகளேக் கொண்டுவந்து விடுவார்கள். அதஞல்தான் பயப்படுவது. ஆஞல் சாதாரணமா திருடும்போது அவர்களால் எங்களேப் பிடிக்க முடியாது.”

“ஏன்! அவர்கள் இரவு நேரங்களில் சுற்றி வருகிருர்களே உங்களேப் பிடிப்பது இல்லேயா.”

“அவர்கள் தெருவில் வரும்பொழுதுதான் தடியாலே ‘டக் டக்’ என்று அடித்துக்கொண்டு வருகிருர்களே! அவர்கள் வர்ரதுக்கு முன்னுலே அவர்கள் தடிசப்தம் கேட்டு நாங்களாக ஒளிந்துகொள்வோம். அதஞல்தான் திருடும்பொழுது எங்களேப் பிடிக்க முடிவது இல்லே. பிறகு திருடிய சாமான்களேக் கொண்டுதான் எங்களேப் பிடிக்கமுடியும்.”

இப்படிப் பல சமயங்களில் பேச்சு நிகழும். வள்ளியின் நேர்மையான உள்ளத்திற்கு அவன் திருட்டுத் தொழில் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லே. தவருகப் பொருளீட்டி அதில் அடைகிற செல்வத்தைவிட நேர்மையான முறையில் சம்பாதித்து வாழ்க்கை நடத்திவந்த முன்னேய நிலேமை எவ்வளவோ மேலானதாகக் காணப்பட்டது.

"திருட்டுச் சொத்தைக் கொண்டு எளிதில் போலீசார் பிடித்துக் கொள்வார்கள்" என்று சொல்லியது அவளுக்கு அச்சத்தை விளைவித்தது.

"வேண்டாம்! இந்தத் தொழிலை விட்டு விடுங்கள்" என்று பலமுறை மன்றாடிக் கேட்டுக் கொண்டாள்.

அவன், "முடியாது" என்று தன் தீர்மானமான முடிவைப் பல முறையுஞ் சொல்லிவிட்டான்.

அவளுக்கு ஒருநாள் கோபம் வந்து, "நானே போலீசாரிடம் காட்டிக் கொடுத்துவிடுவேன். நீங்கள் இரவு நேரங்களில் வெளியே போகக்கூடாது" என்று தடுத்துப் பார்த்தாள்.

கையிலிருந்த பிச்சுவாவை எடுத்துக்காட்டி, "இதோ பார்! தைரியம் இருந்தால் சொல்லு. என்தொழிலைத் தடுக்க உன்னால் முடியாது" என்று கோபமாகப் பேசினான்.

'பள பள' என்று மின்னிய அந்தக் கத்தியைக் காணும்பொழுது அவளுக்கு ஒன்றும் அச்சம் தோன்றவில்லை. அந்தக் கத்தியின் கூர்மையைவிட அவன் பார்த்த பார்வைதான் அவளுக்குப் பயங்கரமாக இருந்தது.

"ஊஹூம் நீங்க ஒண்ணு. சும்மா பயமுறுத்தினேன். அதற்குள் இப்படிக் கோவிச்சிக்கிறீங்களே!"

"ஊஹூம் நானும் சும்மா பயமுறுத்தினேன். அதற்குள் இப்படிப் பயந்துவிட்டாயே!" என்று சமாதானப் படுத்தினான்.

அந்த இருவர் சமாதானப் பேச்சுக்குமிடையே ஏற்பட்டிருந்த பிளவு வெளிக்குக் காட்டாவிட்டாலும் உள்ளுக்குள்ளே பெருகி வந்தது. சில நாளில் வள்ளி வீட்டைவிட்டு எங்குப் போயிருப்பாள் என்பதைப் பற்றிய பிரச்சனையே

கண்ணன் மனத்தை வாட்டத் தொடங்கியது. எப்படியும் அவள் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுவாள் என்ற அச்சம் அவனை அப்படி வாட்டி வந்தது. அவளை ஒழித்தாலல்லது தான் நிம்மதியாக வாழமுடியாது என்ற தீர்மானமும் அவனுக்கு அவ்வப்பொழுது தோன்றி வந்தது.

## [ 10 ]

“வள்ளீ ! வாழ்க்கையில் நாம் நினைப்பது போல எதுவும் முடிவதில்லை.”

“அதுவும் பெண்களின் வாழ்க்கை விசித்திரமாக முடிகிறதம்மா” என்று தங்கத்திற்குப் பதில் சொன்னாள் வள்ளி. மேலும் தொடர்ந்து அவர்கள் பேச்சு நடந்தது.

“அதுமட்டுமில்லை. எல்லாருடைய வாழ்க்கையும் எதிர்பாராத விதமாகத்தான் முடிகிறது. சில சமயங்களில் விபரீதமாகவும் முடிகிறது. ஆனால் அத்தகைய சூழ்நிலையிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிவந்துவிட்டாய். அந்தத் தைரியம் எனக்கு ”

“ஏ’ன்மா ?”

“நானும் உன்னைப் போல விடுதலை அடையவேண்டுமென்றுதான் முயற்சிக்கிறேன். அவன் முரடன் என்று நீ சொல்கிறாய். அதைவிட இந்தக் கட்டுப்பாடுகள் முரட்டுத்தனமாக இருக்கின்றன.

“ஏ’ன்மா அவர் உங்களிடம்........”

“அன்பாகப் பழகவில்லையா என்ற சாதாரண கேள்வியைத்தானே கேட்க விரும்புகிறாய். நான் சுந்தரத்தைத் தவிர ”

“சரிதான்! நாடகம் தொடர்ந்துதான் நடைபெறு கிறதா”

“ஆமாம். அதில் தோழிப்பகுதிக்கு வள்ளி இல்லாத தால் தான் இத்தனைநாள் சிறிது தடைபட்டு வந்தது” என்று சிரித்துக்கொண்டே தங்கம் சொன்னாள். அந்தச் சிரிப்பொலியில் வள்ளியின் சிரிப்பொலி கலந்தொலித்தது.

அந்தச் சிரிப்பொலிக்கப்புறம் ஆழ்ந்த சிந்தனையின் அறிகுறியாக சிறிது நேரம் அமைதி நிலவிற்று. அவர்கள் பேச்சின் முடிவில்

“வேறு வழி இல்லை வள்ளி.”

“சரி அப்படியே செய்கிறேன்” என்ற வள்ளியின் பதி லோடு அன்றைய பேச்சு முடிந்தது.

அதற்குள் அந்தப் பக்கத்தில் தனசேகரர் வந்து சேர்ந் தார். அவர் அணிந்திருந்த அங்கவஸ்திரம் அவரை வய தில் குறைத்துக்காட்டவில்லை என்றாலும் ஏதோ சந்தோஷ மாக வெளியே புறப்படுவதைப் போல இருந்தது. அந்த அகலமான சந்தன பொட்டு அவரது முகத்திற்குச் சோபை யைக் கொடுத்தது. கையில் அணிந்திருந்த வைரமோதிரங் கள் தான் பெரிய பணக்காரர் என்பதை அவ்வப்பொழுது கண்சிமிட்டி உணர்த்துவதைப் போல இருந்தது. அவரது போக்கே ஒரு தினுசாக இருந்தது.

“வள்ளீ! நான் வரக் கொஞ்சம் நேரம் ஆகும். வரா விட்டாலும் பொழுது விடிந்ததும்”

“வர்ரீங்க. அப்படியே சொல்லிவிடறேனுங்க.”

கார் விர்ரென்று புறப்பட்டது. தங்கமும் வெளியே வந் தாள். சுந்தரத்தின் முகம் மறையும் வரையிலும் அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

" என்னம்மா! அதற்காகவா கவலைப் படறீங்க. கொஞ்சம் வயசானுலே இந்த ஆம்பளைகட்கு இது சகஜமாகப் போகிறது. ஒருவன் ஒருத்தியோடு வாழ்வது யாரோ ஒரு சில பேருதான்'மா."

" இப்பொழுதுதான் சந்தோஷப்படுகிறேன். இனிமேல் தான் எனக்குத் தொல்லை கிடையாது. ஆனுல் பாவம்! எந்தப் பெண் இவரது."

" அதனுல் என்னம்மா தப்பு இருக்குது. வாழ வழியில்லாமல் எத்தனையோபேர் திக்கற்றுச் சாவதைவிட இப்படி வாழ்வது மேல் என்று நினைக்கிருர்கள். அதுமட்டுமில்லையம்மா. இந்தமாதிரி பெண்கள் இல்லையென்ருல் இந்த ஆண்கள் நடத்தைக்குக் குடும்பப் பெண்கள் இரையாவது நிச்சயம். இது தெரியாமல் அவர்களைப் பலபேர் பழிக்கிருர்கள்."

" ஏன் வள்ளி! அவர்கள் ஏதாவது வேலை செய்து பிழைக்கக்கூடாதா."

" உடலுழைப்புக்கு மதிப்பும் வாழ்வும் இல்லாதவரை உங்கள் உபதேசம் செல்லாதம்மா. அதிலும் ஆண்திக்கு இல்லாத குடும்பங்கள் வாழவே வழிகிடையாதம்மா. கொஞ்சம் அழகாக இருந்தால் வீட்டு வேலைக்கு வைத்துக்கொள்ள நம்மைப் போன்ற பெண்கள் பயப்படுகிருர்கள். அப்படி வேலைக்கு வைத்துக் கொண்டாலும் பல குடும்பங்களில் அவர்கள் வருகையால் கணவன் மனைவியருக்குள் சண்டைகள் ஏற்படுகின்றன. விளக்கம் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. அதுமட்டுமா, அவர்கள் செய்யும் வேலைக்குக் கிடைக்கும் சம்பளம் அவர்களையும் காப்பாற்றிக்கொள்ள முடியாது. அதனுல்தான் இந்த நிலைமை.

உங்கள் நிலைமை மட்டும் எந்த அளவு இருக்கிறது என்று யோசித்துப் பாருங்கள். உங்கள் விருப்பப்படியா

மணம் செய்துகொண்டீர்கள்? பணத்திற்காக உங்களை விற்றமாதிரி தானே ஆகிறது. நீங்கள் ஒருத்தரோடு வாழ்க்கை நடத்த வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அதற்குத் தகுந்த அளவில் சொத்து சுகம் எல்லாம் ஏற் படுத்திக் கொடுக்கிறார்கள். எதிர்காலத்தைப் பற்றியும் உங்களுக்குக் கவலையில்லாமல் செய்ய முற்படுகிறார்கள். ஆனால் அந்த நிலைமையை எந்த ஆண்மகனும் அவர் களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க முன் வருவதில்லை. அதனால் தான் அவர்கள் பலபேரை எதிர்பார்க்கிறார்கள். அப்படி ஒருசிலர் ஆதரவு கொடுத்துச் சீர்திருத்த வாழ்வு வாழ முற்பட்டாலும் அவர்களைச் சமூகம் வெறுக்கிறது. குடும்ப வாழ்வு என்ற மாளிகையில் வாழ்கிறவர்கள் சமூகம் என்ற சங்கத்தை வைத்து இந்த அபலைகளைக் குறைவாகப் பேசி அவர்களைத் தங்களோடு சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள். அவர்களையும் மனிதர்களாக மதித்து மனங்கலந்து சமூகம் பழகுகிற வரையில் அவர்கள் திருந்துவதற்கு வழி கிடை யாது அம்மா! அவர்கள் குற்றத்தை மறந்து பழகும் வரை யிலும் திருந்துவதற்கு வழி கிடையாது.

"வள்ளீ! உனக்கு இருக்கிற விவேகம்!"

"உண்மையை விளக்கமாகச் சொன்னால் அதை விவேகம் என்கிறீர்கள்."

"அதுமட்டுமில்லை. திறமையாக ஒரு காரியத்தைச் செய்யும் அறிவையும் விவேகம் என்று சொல்லுவார்கள். அந்த விவேகத்தைத்தான் உன்னிடம் எதிர்பார்க்கிறேன்."

"ஆமாம். இனிமேல் நாம் செய்யப் போகிற காரியம் ஹாஸ்யமாகத்தான் இருக்கப் போகிறது."

"உனக்கு ஹாஸ்யமாக இருக்கும், எனக்குப் போராட்ட மாக இருக்கும்."

" ஹாஸ்யத்தைப் போராட்டத்திலே கலந்துவிடுங்கள். அப்பொழுதுதான் நாடகம் சுவாரஸ்யமாக இருக்கும்."

" சரிதான் ! வேடிக்கையை விடமாட்டாய் வள்ளீ நீ."

"வேடிக்கையை விட்டு விட்டால் வாழ்க்கை கசந்து விடும்'மா." என்று சொல்லி விட்டு வள்ளி வீட்டு வேலையைக் கவனிக்கச் சென்று விட்டாள். தங்கம் அப்படியே மாடியின் முற்றத்தில் நாற்காலியிலே அமர்ந்து கொண்டு அவள் சிந்தனையைப் பறக்கவிட்டாள். அது சுந்தரமும் தானும் சுந்தர நிலவினிலே பேசி மகிழ்ந்த அந்த இன்ப நினைவுகளுக்குக் கொண்டு சென்றுவிட்டது. ஆகாயத்தில் நட்சத்திரங்களை மறைத்துக் கொண்டிருந்த மேகங்கள் கலைந்தது. அவள் சிந்தனையும் கலைந்தது. காற்று சிறிது வேகமாகவே வீசிக்கொண்டிருந்தது. வெளியே இருள் சூழ்ந்திருந்தது. தன் உள்ளத்திலும் இருள் சூழ்ந்திருப்பதைப் போன்ற உணர்ச்சி அவளுக்கு உண்டாயிற்று. இதயத்தில் ஏதோ ஒரு பாரம் இருப்பது போல இருந்தது.

அந்தப் பாரத்தைப் போக்க, எதிர்காலத்தில் அமைய இருக்கும் தன் வாழ்க்கை நிலைமையை எண்ணிக் கொண்டு அந்தத் துன்பத்தை மறக்க முயன்றாள். அதே வீட்டில்தான் சுந்தரம் இருக்கிறான். ஆனால் இருவரும் சந்திக்க முடியாதபடி இடையே எவ்வளவு பெரிய பள்ளம் இருக்கிறது அதை எப்படிக் கடந்து அவனைச் சந்திக்க முடியும் என்ற எண்ணம் தோன்றியவாறு இருந்தது ஆனால் அந்தப்பள்ளத்திலிருந்து தாவிக் குதித்து விடலாம் என்ற நம்பிக்கையும் அவளுக்குத் தோன்றிக் கொண்டிருந்தது.

விழிகள் சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றன. உள்ளமும் ஒன்றோடொன்று கலந்து உறவாடத்தான் செய்கின்றன. ஆனால் இருவரும் சேர்ந்து வாழ இயலாத

நிலைமையை எண்ணும்பொழுது ஓ என்று அழுதுவிடலாமா என்று அவளுக்குத் தோன்றியது.

விண்ணிலே கரிய மேகங்களைக் கிழித்துக்கொண்டு வெண்ணிலா தன் தண்ணிலவைப் பொழியத் தொடங்கிற்று. பின்னால் வந்து நின்று தன் தோள்களை அவன் தொடுவது போன்ற உணர்ச்சியை அவள் அடைந்தாள். அந்த இன்ப வேதனையை அவளால் தாங்க முடியவில்லை. பெருமூச்சுவிட்டு எழுந்து நின்றாள். பின்னால் வள்ளி அப்பொழுதுதான் அவள் தோள்களின் மீது தன் கைகளை வைத்துக் கொண்டு,

“என்னம்மா! ஆகாயத்திலே இருக்கிற நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்” என்று சொல்லிக் கொண்டு வள்ளி பின்னால் வந்து நிற்பதைக் கண்டாள்.

“வெறிச்சென்ற ஆகாயத்தில்கூட மின்னும் நட்சத்திரங்கள் இருந்து ஒளிபடுத்துகிறதே என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். நிறையிருளில் மின்னல் வீசுவதும் வான வெளியில் நட்சத்திரங்கள் மின்னுவதும் எதைக் காட்டுகிறது வள்ளி!”

“வாழ்க்கையில் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று காட்டுகிறது. அக்கா! எதை நினைத்து இப்படிப் பெருமூச்சு விடுகிறீர்கள்?”

“இந்தக் கவிகள் வானத்தையும் நட்சத்திரங்களையும் தண்ணிலவையும் பாடிப் பாடிச் சலிக்கவில்லையே. வான் நிலவு இன்பத்தைக் கொடுக்கும் என்கிறார்களே, அது ஏன் எனக்குக் கொடுக்கவில்லை என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். நிலவு, உள்ளத்தைக் குளிர்விக்கும் என்கிறார்களே அது ஏன் என் உள்ளத்தைக் குளிர்விக்கவில்லை என்று எண்ணி ஏங்கிப் பெருமூச்சு விட்டேன் வள்ளி.”

" கன்னியின் உள்ளத்தில் எழுங் கவிகளை நீங்கள் பாடுகிறீர்கள். உங்கள் கவிதைகள் மற்றக் கவிதைகளை விட மாறுபட்டிருக்கும்."

" நான் சொல்லுவது, சோகங்கலந்த கவிதை வள்ளி! உனக்கும் இந்தமாதிரி எண்ணம் வராமற் போகாது. நீயும்..."

" அக்கா! அந்த முரடனை எனக்குக் கவனப் படுத் தாதே. அந்தக் கொடிய பார்வைகள்! அம்மம்மா! நினைக் கவே பயங்கரமானது."

" வள்ளி! சுந்தரத்தின் அன்புப் பார்வைகளை நினைத்துக் கொண்டால் அதைவிட வேதனை கொடுக்கிறது. வள்ளி! சோகமான பாட்டு ஒன்று பாடேன். அதுதான் எனக்கு அமைதி கொடுக்கும்."

" ஒப்பாரி பாட்டுத்தானே யம்மா நான் கற்றிருக்கிறேன். பாடட்டுமா?"

" சரிதான் ஆரம்பித்துவிடாதே! ஊரே திரண்டு வந்து விடும்."

" அப்போது உங்கள் துக்கமெல்லாம் மறைந்து ஒரே சிரிப்பாயிடும். கவலைப்படாதீங்க, இருளுக்குப் பின் கட்டாயம் ஒளி இருக்கத்தான் செய்யும்" என்று சொல்லும்பொழுது விடியும் நேரம் ஆகிவிட்டது. போனகாரும் திரும்பி வீடு நோக்கி வந்தது.

# [ 11 ]

இப்பொழுதெல்லாம் டிரைவர் சுந்தரம் தனசேகரருக்கு நெருங்கிய நண்பர் ஆகிவிட்டார் என்று சொல்வதைவிட அவர் அந்தரங்கக் காரியதரிசி ஆகிவிட்டார் என்றுதான் சொல்ல முடியும். அவர் இவனிடம் சில சமயங்களில் வாய் விட்டுப் பேசுவார்.

" சுந்தரம்! அவள் தாசிமகள் அல்ல."

" ஆமாங்க. அப்படியெல்லாம் ஒரு குலம் தனிப்பட்ட முறையிலே இல்லேங்க. அந்தச் சாதி மெல்ல மெல்ல ஒழிந்து போச்சுங்க."

" ஏன் ரொம்ப முன்னேறிட்டாங்களா?"

" மற்ற குலத்திலேயிருந்து பலபேர் அந்தத் தொழிலுக்குப் போட்டி போட ஆரம்பித்து விட்டதனுல்தானுங்க."

" பாரு! உன்கிட்டே சொல்றதுக்கு என்ன? அவள் எவ்வளவு தாராளமாகப் பழகினுள் தெரியுமா? எவ்வளவு இனிமையாகப் பேசினுள் தெரியுமா!"

" நாடகத்திலே நடித்துப் பழக்கமாயிருக்குங்க. இல்லா விட்டால் அடிக்கடி சினிமாவுக்குப் போய் அந்த 'டயலாக்' பழக்கமாயிட்டு இருக்குங்க."

" ஆமாம். இவர்கள் எல்லாம் உனக்கு எப்படிப்பா அறிமுகம்!"

" ஊம் ஊம் நான் நான் உங்களிடம் வேலேக்கு வர்ரதுக்கு முன்னுலே டாக்ஸி ட்ரைவரா இருந்தேனுங்க. அப்ப இவங்கதான் அதிகமாக டாக்ஸியிலே ஏறுவாங்க. அப்பத் தான் இவங்க விலாசமெல்லாம் கொஞ்சம் பழக்கங்க. இப்ப நீங்களா இந்தமாதிரி விஷயத்தைப் பேச ஆரம்பிச்சதனுலே"

“ஆங் ஆங் அதற்கென்ன பரவாயில்லை. நமக்கு இதிலெல்லாம் கொஞ்சம் ஷோக்கு. பாரு - நீ கலியாண மானவன். உனக்கு இதெல்லாம் தெரியும்.”

“ஆமாங்க. அதனால்தான் மனிதருடைய உணர்ச்சிகளெல்லாம் கொஞ்சம் தெரிஞ்சு...”

“நடந்துகிறே. இன்றைக்குச் சாயங்காலம் கார்”

“அதற்கென்ன 6 மணிக்கெல்லாம் வந்துவிடுகிறேன்”

இப்படி இருவரும் மிகவும் நெருங்கிப் பழக ஆரம்பித்தார்கள். தனசேகரர் வர வர ஷோக்காளி ஆகிவிட்டார். இதைத்தான் சுந்தரமும் தங்கமும் எதிர்பார்த்து வந்தது. அதுவரையிலும் தங்கத்திற்குத் தொந்தரவு இல்லையென்பதால் சுந்தரம் சந்தோஷம் அடைந்ததோடு மட்டுமில்லாமல் அவருக்குப் பெரிதும் உதவி வந்தான்.

அன்றைக்கு ஒருநாள் தனசேகரர் மிகவும் ஏமாற்றம் தோய்ந்த முகத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தார்.

“என்னங்க! ஒரு மாதிரியா இருக்கிறீங்க.”

“ஊம். அந்த இடத்தில் அவள் ஏமாற்றி விட்டாள்!”

“என்னங்க அது! அவளுக்கு வேண்டியது பணந்தானே!”

“அப்படித்தான் நான் இதுவரையிலும் நினைத்து ஏமாந்து போனேன். யாருக்கும் வாழ்க்கையின் அடிப்படைத் தேவை நிறைவேறும் வரையில்தான் பணத்திற்கு மதிப்பு. அதற்குமேல் போய்விட்டால் பணத்தை மதிப்பதில்லை. அவள் இப்பொழுதெல்லாம் பணத்தை மதிப்பதில்லை.”

“அதனாலென்னங்க! நல்லதாப் போச்சு.”

“சரிதான்! அப்புறம் அவள் ஏன் என்னை மதிக்கிறாள்?”

“அப்புறம்?”

“ஒரு மைனர் பின்னாலே சுத்துகிறாள். அவன்தான் அவளுக்குப் பிடிச்சு இருக்காம்! பொது மகளுக்குக்கூட இந்த மாதிரி”

“புத்தி பிறந்து விட்டால் மற்றவர்களைப் பற்றி”

இந்தப் பேச்சு முடிவதற்குள் வள்ளி அந்த இடத்திற்கு வந்தாள்.

“என்னங்க! உங்க கிட்டே முக்கியமான விஷயம்”

[அந்தக் குறிப்பை அறிந்து கொண்டு சுந்தரம்]

“வர்ரேனுங்க நான் வேறு ஒரு நல்ல இடத்திலே”

“சரிதான். பணத்தைப் பற்றிக் கவலையில்லை. அந்த இடம் மாதிரி.”

“இருக்காதுங்க. பணத்துக்கென்னங்க! நீங்க கஷ்டப் பட்டா சம்பாதிக்கிறீங்க! தானா வருது வீணா போவுது.”

அதனுடைய விளக்கத்தைப் பற்றிக் கவனித்ததாகத் தெரியவில்லை. “போயவா” என்று விடை கொடுத்தார்.

“நான் வரச் சில நாளாகும். வர்ரேனுங்க”

“பரவாயில்லை. ஆனால் கட்டாயம்!”

“ஏற்பாடு பண்றேனுங்க” அதனுடைய பொருள் இருவருக்கும் தெரிகிற அளவில் பேசிக்கொண்டார்கள். சுந்தரம் அந்த இடத்தைவிட்டு நீங்கினான்.”

“என்னங்க அது ஏற்பாடு?”

“அது அது அது வியாபார விஷயம். அது போகட்டும் நீ ஏதோ”

“அதுவுங்க்ளா குடும்ப விஷயம். நீங்க அம்மாவை”

“ கவனிக்கிறது இல்லே’ண்ணு சொல்ருங்களா ”

“ அதெல்லாம் இல்லே. நல்லாக் கவனிக்கிறதாகத்தான் சொல்ருங்க. அவங்க சந்தோஷத்துக்கு ஒண்ணும் குறைவே இல்லே.”

“ மெய்யாகவா ! அப்படியா சொன்ஞங்க !”

“ ஆமாங்க. அவங்களுக் கென்ன குறைவு. கட்டிய கணவன் இருக்கச்சே வேறு என்ன வேணும் ! அதிலும் நீங்கள் ...”

“ நான் ?”

“ ஆமாங்க ! நீங்க வாங்கிக் கொடுக்கிருப்போல புடவை நகைகள் யாரு வாங்கிக் கொடுப்பாங்க. அவற்றை எவ்வளவு பத்திரமா பீரோவிலே அடுக்கி வச்சிருக்காங்க. நகைகளை யெல்லாம் கொஞ்சங் கூட அழகு கெடாமல் அப்படியே பெட்டியிலே வச்சிக் காப்பாத்தருங்க. தாய் வீட்டுப் புடவைகளைத்தான் கட்டி அவங்களுக்குத்தான் செலவு வைக்கிருங்க, எல்லாம் உங்கமேலே இருக்கிற ”

“ வெறுப்பு.”

“ என்னங்க ! இப்படித் தவருக நினைச்சிகிட்டுப் பேசறீங்க. அந்த அம்மா உங்கமேலே இருக்கிற ஆங் நான் என்னன்னு சொல்றது ! அதுமட்டுமா குழந்தை வேணு மென்று சுத்தாத கோயில் குளமே கிடையாது.”

“ என்ன இது ! கோயில் குளம் சுத்திஞல் குழந்தை பிறந்திடுமா !”

“ நீங்களா இப்படிப் பேசறது ! பெரியவங்க நீங்களே இப்படிப் பழைய காலத்திலே இருந்து வர்ர பழக்கங்களைப் பழிச்சா ”

" அதெல்லாம் சும்மா."

" இல்லாட்டா சோஷியல் கிளப் இந்த மாதிரி இடங்களுக்குப் போய்ச் சுற்றிஞல்... என்னங்க நீங்க பேசறது !

" எல்லாங் கால வித்தியாசம். அப்படியும் சிலருக்குப் பிறக்கத்தான் செய்கிறது. அவள் பைத்தியக்காரி."

" அது முன்ஞலேங்க. இப்பொழுது..."

" காரியக்காரி. இரண்டு பேருக்கும் அவ்வளவா வித்தியாசம் இருக்கிறதாக எனக்குப் படவில்லை."

" அது என்னமோ கடவுள் கிருபையாலே இரண்டு மாதமா "

" என்ன ?"

" முழுகாமல் இருக்காங்க."

" என்ன ?" என்று மீண்டும் கேட்கும் பொழுது அவருக்கு ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது போல இருந்தது. பூமி சுற்றுகிறது என்று சிறுவயதில் பூகோள புஸ்தகத்தில் படித்த உண்மையை நேரில் காண்பது போல இருந்தது. அப்படியே ஒன்றும் தோன்ருமல் சாய்ந்து விட்டார். வள்ளி வேகமாக உள்ளே சென்று வந்து அவர் முகத்தில் தண்ணீர் தெளித்து விசிறியால் விசிறத் தொடங்கிஞர்.

அதற்குள் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஒரு சிலர் வந்து குழுமிவிட்டனர்.

" என்ன ! ஐயாவுக்கு இப்படி மயக்கம் வந்து விழுந்து விட்டாரே " என்று கேட்கத் தொடங்கினர்.

" சந்தோஷ சமாசாரந்தானுங்க " என்று வெடுக்கென்று பதில் சொல்ல ஆரம்பித்தாள் வள்ளி.

நிலைமையை ஒருவாறு தனசேகரர் உணர்ந்து கொண்டார்.

“ ஆமாங்க. சந்தோஷ சமாச்சாரந்தானுங்க ” என்று மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவர் ஒருவாறு கூறிச் சமாளித்துக் கொண்டார்.

பக்கத்திலிருந்த டம்ளர் தண்ணீரை வள்ளி எடுத்துக் கொடுத்தாள். அவரும் அதை எடுத்துக் குடிக்கத் தொடங்கினார்.

“ ஆமாங்க; சந்தோஷத்திலே கூட அதிர்ச்சி அடைவதுண்டு என்று கேள்விப் பட்டிருக்கிறோம் ” என்று ஒருவர் சொல்ல மெல்ல அந்த இடத்தைவிட்டு எல்லாரும் நகர்ந்தார்கள்.

“ துக்க சமாச்சாரமாயிருந்தால் அவங்களா சொல்லுவாங்க. இதை எப்படிக் கேட்கிறது. நல்ல அதிருஷ்டம் வந்திருக்கும். இதையெல்லாம் வாய்விட்டுச் சொல்லுவார்களா ” என்று அவர்களே தங்களுக்குள் பேசிக்கொண்டு சென்றனர்.

“ என்னங்க இது ! ஊரு திரண்டு விடறாப்போல நடந்துகிட்டீங்களே. உலகத்திலே இல்லாத நிகழ்ச்சியா நடந்து விட்டது. இதற்குப் போய் அதிர்ச்சி அடைந்து விட்டீர்களே !” என்று வள்ளி மெதுவாகப் பேச்சைத் தொடர்ந்தாள்.

“ ஆம் ! நடந்து விட்டது ” என்று சுருக்கமாகக் கூறி முடித்துக் கொண்டார்.

“ சரிதான் ! உங்களைத்தான் குழந்தைகள் கட்டுப்பாடு பிரசார சங்கத்திற்குத் தலைவராக்க வேண்டும் ! இன்னும் ஒன்று கூடப் பிறக்கவில்லை, அதற்குள் வேதனைப்பட ஆரம்பித்து விட்டீர்களே !”

அதற்குள் தங்கம் வள்ளியைக் கூப்பிட்டாள்.

" அவரோடே என்ன விளையாட்டுப் பேச்சு !"

" ஆமாம். நீங்களாகச் சொல்லாவிட்டாலும் நான் கூடவா"

"சொல்லிவிட்டாயா ! சரிதான் அதுக்குத்தான் உன் கிட்ட எதுவும் சொல்லக்கூடாது என்கிறது."

" எந்த விஷயமும் மனசை விட்டு வெளியே வந்து விட்டால் அது ரகசியம் இல்லே'ம்மா."

" அது போகட்டும். நான் அம்மா வீட்டுக்குப் போகணும். அவரிடம் அதையும் சொல்லிவிடு" என்று கூறி விட்டு அந்த இடத்தை விட்டு நீங்கினாள் தங்கம்.

வைராக்கியம் பிறந்தது, பிடிவாதம் வலுத்தது ; முரட்டுத்தனம் அவரிடம் வளர்ந்தது. அதன் முடிவுதான்:

" முடியாது. போகக்கூடாது" என்று எதிர்பார்த்த வண்ணம் அவரிடமிருந்து பதில் பிறந்தது. வள்ளியும் தன் வேலைகளைக் கவனிப்பதில் ஈடுபட்டாள்.

அவருடைய மனத்தில் பல எண்ணங்கள் இடியும் மின்னலும் போலத் தாக்க ஆரம்பித்தன.

" நான் மணஞ் செய்துகொண்டபோது அவள் மறுத் திருக்கக் கூடாதா ?"

" அது எப்படி மறுத்திருக்கக்கூடும் ? அவள்தான் பைத்தியமாகக் கிடந்தாளே."

" பைத்தியத்தை மணஞ்செய்து கொண்டாயே நீ ஒரு பைத்தியக்காரன்."

" இல்லை. அவள் பைத்தியந்தான் தெளிந்து விட்டதே பிறகு"

" பிறகு அவள் உன்னை மனப்பூர்வமாக வெறுத்தாளே அப்பொழுதே அவளை "

" அவள் மாறுவாள் என்று நம்பிக்கை கொண்டேன்."

" அவள் மாறவில்லை. அவளை உன் வீட்டில் வைத்துப் போற்றுவதின் அவசியம் ?"

" அவள் மறுக்கலாம். ஆனால் அவள் என் மனைவி அல்ல வென்று உலகம் மறுக்குமா ?"

" மறுக்காது. ஆம். அந்தக் குழந்தை உனக்குத்தான் பிறந்தது என்று சொல்லும். அதை உன்னால் மறுக்க முடியுமா !"

" மறுத்தால் என் கவுரவம் ? "

" ஏன் மறுக்க வேண்டும். அதனால் என்ன நன்மை ? அவசியமில்லாத தூற்றல்."

" அவளைத் தாய் வீட்டுக்கு"

" அனுப்பாதே. அங்கே அவள் விருப்பப்படி"

" ஆம். அந்தக் கள்ளக் காதலன் யார் ?"

" அவனைக் கண்டுபிடித்துத்தான் ஆகவேண்டும்."

" அவனோடே கொஞ்சிக் குலாவத்தான் அவள் ஊருக்குப் போகத் திட்டம்."

" அதுதான் இனிமேல் முடியாது."

இவ்வாறு பல எண்ணங்கள் அவர் மனத்தில் தோன்றிப் போராட்டம் உண்டாக்கின. மனப் போராட்டத்தின் முடிவு வெளிப் போராட்டத்தின் ஆரம்பமாக அன்றிரவு தொடங்கிற்று. தங்கம் இருந்த தனியறையில் மெல்ல நுழைந்தார் தனசேகரர்.

அந்த இருட்டில் வந்த உருவம் யாரென்று சரியாகத் தெரியாவிட்டாலும் நடையின் அசைவிலிருந்து ஒருவாறு தெரிந்து கொண்டாள்.

"எவ்வளவு நேரம் உங்களுக்காகக் காத்திருப்பது! ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு"

"வருஷம் போல இருந்ததா! இருக்கும். உன் கள்ளக் காதலனிடம் கொஞ்சிக் குலாவுகிருயா?"

"ஓகோ நீங்களா! காதலில் எப்பொழுதும் கள்ளம் கிடையாது. அது தூய்மையானது."

"அப்படித்தான் நினைத்துக் களங்கம் ஏற்படுத்தி விட்டாய்"

"இல்லை. இதுவரையிலும் ஏற்படுத்தவில்லை" என்று கூறியதும் அவருக்கு ஆறுதல் பிறந்தது. மெல்ல அவள் அருகில் வந்து உட்கார்ந்தார். சட்டென்று தங்கம் படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

"தங்கம்! வள்ளி சொல்லியது அத்தனையும்"

"உண்மைதான். உண்மை எப்படியும் வெளிப்பட்டுத் தானே தீரும்."

"ஆனுல் சில உண்மைகள்"

"வெளிப் படாதிருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள்."

"உனக்கு?"

"எனக்கு அதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. எனக்குக் குழந்தை பிறப்பது தவரு?"

"அது யாருக்கு?"

" அது என் குழந்தை. என் வயிற்றில் வளரும் குழந்தை. என் ரத்தத்தைக் கொடுத்து நான் வளர்க்கும் குழந்தை. அதுவரையிலும அது என்னுடைய குழந்தை தான்."

" வேண்டாம் ! துரோகம் !"

" அது உங்கள் சித்தாந்தமாக இருக்கலாம். ஆனல் இயற்கையின் ஆற்றல்"

" அதை அழித்துத்தான் தீரவேண்டும்."

" நான் யாருக்கு அஞ்ச வேண்டும் ? நீங்கள் வேண்டுமானல் அது எனக்குப் பிறக்கவில்லை என்று சொல்லிக் கொள்ளுங்கள். ஆனல் நான் எனக்கே பிறந்ததாகச் சொல்லிப் பெருமைப் படுவேன். அதில் சந்தேகம் இல்லை."

" எனக்குப் பிறந்ததாக நான் எப்படியும் சொல்ல முடியாது. அப்படிச் சொல்ல வேண்டுமானல் இனியேனும் நாம் "

" பிரிந்து விடலாம்."

" இல்லை. கணவன் மனைவியாக "

" வாழலாம் என்று ஆசைப்படுகிறீர்கள். அதில் "

" அதில் "

" அதில் எனக்கு விருப்பமில்லை. இனி உங்கள் மொழியில் பேசினல் நான் விப...... என் மொழியிலே பேசினல் நான் கற்புடையவள். மொழி வித்தியாசம். அவ்வளவுதான்."

" நான் உன் கணவன் என்பதை மறந்து விடுகிருய் ! எனக்கு உன்னை அடைய எல்லா "

" உரிமையும் உண்டு என்று கனவு காண்கிறீர்கள். நீங்கள் கணவன் என்று சொல்லுவது வேறு எந்தச் சொல்

லால் சொல்லுவது என்று தெரியாத காரணத்தால் தான். உங்கள் மொழியிலே சொன்னால் நான் வேறு ஒருவருடைய மனைவி."

"பைத்தியக்காரி !"

"ஆம். அதனால்தான் என்னை மணஞ் செய்து கொண்டீர்கள்."

"அதெல்லாம் முடியாது. நீ அந்தக் கருவைச் சிதைத்துத்தான் ஆக வேண்டும். பிறகு நீயும் நானும்"

"உஷ். அந்த எண்ணத்தை அடியோடு விட்டு விடுங்கள்."

"பிறகு"

"என்னை என் தாய் வீட்டுக்கு அனுப்பி விடுங்கள். என்மேல் 'விபசாரி' என்ற பட்டத்தைக் கட்டி என்னை விலக்கி விடுங்கள். இதைத்தான் நான் வேண்டுவது."

"இல்லாததை ஒன்றும் சொல்ல வில்லையே."

"உண்மையைத்தான் சொல்லச் சொல்கிறேன். அதைச் சொல்லப் பயப்படுகிறீர்கள். பயப்படாமல் சொல்லுங்கள். எப்படியாவது நாம் இருவரும் பிரிந்து விட வேண்டியதுதான். மணரத்து ஆகவேண்டும்."

"அதெல்லாம் முடியாது. என் கவுரவத்தை நான் இழக்கச் சம்மதிக்க முடியாது. அது எனக்கு அவமானம்."

"இப்பொழுது மட்டும் !"

"நான் மறுத்தால்தானே. அதை நானகச் சொன்னால் தானே. வேண்டாம் ! இது வரையிலும் செய்த தவறை மன்னித்து விடுகிறேன்."

" மன்னிக்க வேண்டிய அவசியமில்லை. உங்கள் கண்ணுக்குத் தவருகப்படலாம். ஆனல் நான் செய்வது தவறு அல்ல. நான் கண்ணியமாக வாழ விரும்புகிறேன். நீங்கள் உலகத்துக்கு அஞ்சிச் சாகிறவர்கள். நான் உலகத்துக்கு அஞ்சாமல் வாழ விரும்புகிறவள்."

" தங்கம்! என் கவுரவத்தைக் குலைக்காதே. குழந்தை பிறந்து போகட்டும். நான் தடை செய்யவில்லை. ஆனல்"

" ஆனல்!"

" ஆனல் அந்தக் குழந்தை எனக்குப் பிறந்ததாகவே உலகம் மதிக்கட்டும். அது போதும்."

" அதுவும் முடியாது. உண்மையை மறைத்துவாழவும் விரும்பவில்லை. 'அவருக்குப்' பிறந்ததுதான். அவர்தான் அதை வளர்க்க வேண்டும். எனக்கு விடுதலை வேண்டும்."

" உனக்கு விடுதலை! எனக்கு அவமானம். அது முடியாது."

" நானுக இந்தச் செய்தியைப் பரப்பினல்"

" அதையும் உலகம் நம்பாமல் செய்ய என்னல் முடியும். உனக்குப் பைத்தியம் திரும்பிவிட்டதாக என்னல் செய்தி பரப்பமுடியும். மறுபடியும் உன்னைப் பைத்தியக்காரி ஆக்கி விடுவேன்."

" ஆம். உங்களைப் போன்ற கொடியவர்களால்தான் பலர், வாழ்க்கையில் ஏமாந்து பைத்தியக்காரர்கள் ஆகிருர்கள்."

" அதனல்தான் உங்களைப் போன்ற 'நல்லவர்கள்' கொஞ்சம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். என்னை உன்னல் எதிர்க்க முடியாது. கவனப்படுத்துகிறேன்."

"பணம் வலிமை உடையதுதான். ஆதன் வலிமையையே நம்பி வாழும் ஓர் எளிமை இருக்கிறதே அந்த எளிமைதான் உங்களை வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை எங்களுக்கு அளிக்கிறது."

"நம்பிக்கை அளிக்கும். வள்ளி நல்லவள். அவள் முன்கூட்டியே சொன்னதற்குச் சந்தோஷப் படுகிறேன். அவள் சொல்லாதிருந்தால்"

"என்னைப் பற்றிய எண்ணம் உங்களுக்கு உண்டாகி இருக்காது."

"ஆம். இனி கட்டுக்காவல் மீறி ஒன்றும் செய்ய முடியாது. 'அவன்' அகப்பட்டால் இங்கேயே சுட்டு வீழ்த்துவது நிச்சயம்."

"உங்களுக்கு அவரைத் தாக்க"

"என்ன உரிமை இருக்கிறது என்று கேட்பாய். எந்த ஆண்மகனும் தன் மனைவியைப் பிறன் தொட விட மாட்டான்."

"அதே வைராக்கியத்தோடு 'அவர்' உங்களை நினைத்தால்"

"நீ யாருடைய மனைவி என்பதை ஞாபகப்படுத்திக் கொள்."

"அதை உங்கள் இதயம் (இருக்கிறது என்று நினைக்கிறேன்) உங்களுக்கு ரகசியமாக உணர்த்தி இருக்குமே!"

"அதிகப் பிரசங்கி. வாயை மூடு."

சிறிது நேரம் மௌனம் நிலவிற்று.

"நான் வருகிறேன். இனியேனும் திருந்தி நடந்து கொள். தெரிகிறதா?"

[பதில் இல்லை.]

" ஏன் ஒன்றும் சொல்லாமல் இருக்கிருய்."

"நான் இனி வாயை மூடிக்கொண்டேன். உங்கள் கட்டளை அதுதான். நான் இனி உங்களிடம் எந்தக் காரணத் தாலும் பேசமுடியாது" என்று எழுதிக் கொடுத்தாள்.

சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டுப் பல்லைக் கடித்து விட்டுத் தன் சினக்குறிப்பைக் காட்டினுர். பிறகு வேறு ஒன்றும் பேசாமல் தனசேகரர் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து விட்டார். அது வரையிலும் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த வள்ளி ஒன்றும் தெரியாதவள போலப் படுத் துக்கொண்டு, தூங்குவதைப் போல் பாசாங்கு செய்தாள்.

" வள்ளீ ! வள்ளீ !" என்று எழுப்பினுர்.

"போய்த் தங்கத்தின் அறையில் படுத்துக் கொள். அவளுக்குத் துணையில்லாமல்"

" ஆமாங்க ! வருத்தப்படுவாங்க. நான் போ'றேன்" என்று சொல்லித் தங்கத்தின் அறையுள் வள்ளி சென்ருள்.

"வா வள்ளி ! நம் திட்டம் ஒன்றும் வெற்றியடைய வில்லை. இரண்டு மாதம் முழுகவில்லை யென்ருலும் சரி, பத்து மாதம் என்று சொன்னுலும் அதற்கெல்லாம் அவர் மசியவில்லை."

" ஒரு வேளை நாம் சொன்னது பொய் என்று கண்டு கொண்டாரா ?"

"சரிதான். மெய் என்று நினைக்க வெச்சே அவரை ஏமாற்ற முடியவில்லை. பொய் என்று தெரிந்திருந்தால் அவர் கவலையே பட்டிருக்கமாட்டார்."

" அப்ப நம்முடைய திட்டம் ?"

"தோல்வி என்று சொல்வதற்கு இல்லை. சிந்தனை யைத் தூண்டி விட்டிருக்கிறது."

"அப்படியென்று நீங்கள் ஆறுதல் கொள்ள வேண்டியதுதான்."

"இல்லை வள்ளி. உண்மையான மாறுதலை உண்டாக்கி விடும். அதற்குரிய காலத்தைத் தான் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்."

இவ்வாறு இவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். இவர்கள் நடித்த நாடகத்தைக் கண்டு சிரிப்பது போல நட்சத்திரங்கள் மின்னிக்கொண்டிருந்தன.

## [ 12 ]

"சுந்தரம்! கார் கொண்டுவா"

"கொண்டுவந்து நிறுத்தி விட்டேனுங்க"

சிறிது நேரத்திற்கெல்லாம் கார் வேகமாகப் புறப்பட்டது.

"எங்கே ஏற்பாடு செய்திருக்கிறாய்?"

"ரிவர் வியூ லாட்ஜியிலே"

"என்ன அங்கேயா!"

"ஆமாங்க. சில லாட்ஜிகள் இந்தமாதிரி சவுகரியங்களுக்கு ரொம்பவும் பயன்படுகிறது."

கார் 'டக்' என்று நின்றது.

"இங்கே தானுங்க. நீங்க தங்கி இருக்கலாம். அவங்களும் அடுத்த அறையில்"

தனசேகரர் சரிகை அங்கவஸ்திரத்தைச் சரி செய்து கொண்டு அங்கே போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியிலே உட்கார்ந்தார்.

அன்ன நடை, மின்னலிடை, மயில் சாயல், அசைந்து ஒசிந்து நிற்கும் ஒய்யாரம், சிரிப்புத்தாங்கிய செவ்விதழ், மையிட்ட கருவிழிகள், வில்லைப் போல் வளைந்த புருவம், பவுடர் பூசிய முகம், 'செல்லுலாய்ட்' சிலையைப் போன்ற உருவம் — ஓர் இள நங்கை — அந்த உருவம் அவர் கற்பனையில் தோன்றிக் கொண்டிருந்தது. அவள் வருகையை ஒவ்வொரு விநாடியும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். கொள்ளையின்பம் காத்துக்கிடக்கும் நிலையில் அவர் மனம் எல்லையில்லா இன்பம் அடைந்தது.

பக்கத்தில் காவிரியாற்றின் சிறு அலைகள் அவர் உள்ளத்தைப் போல அசைந்து கண்ணுக்கினிய காட்சியாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. திடீரென்று காவிரி புரண்டு வெள்ளமாக வரும் பயங்கரக் காட்சியை அடுத்த அறையைத் திறந்துகொண்டு வந்துநின்ற அவர் முதல் மனைவியைக் காணும் காட்சியில் கண்டார். பல சுழிகள் சுழித்துக்கொண்டு பயங்கரமாக அந்தக் காவிரி காட்சி அளிப்பது போல இருந்தது. அதில் மூழ்கித் தத்தளிப்பதைப் போல அவர் மனநிலை கிடந்தது.

“நீ யா?”

“ஆம். நானேதான்” என்று கண்களில் நீர் கலங்க அவர் முதல் மனைவி லட்சுமி பதில் சொன்னாள்.

“இவ்வளவு பெரிய வீழ்ச்சியா?”

“ஆம். உயர்ந்த சிகரத்தில் இருந்தேன். அங்கே ஒரு கல் தடுக்கியது. பக்கத்தில் கீழே விழாமல் தடுத்திருக்க வேண்டும். அதற்கு மாறாக நீங்களே கீழே தள்ளி விட்டீர்கள்.”

" இத்தகைய வாழ்க்கையை நீ"

"அதற்குக் காரணம் யார் என்று ஆர அமர சிந்தித்துப் பாருங்கள்."

" நான் உன் தாய் வீட்டிற்கு அனுப்பினேன்."

" அதிலேதான் தவறு இருக்கிறது. பெண்களுக்கும் ஆண்களைப் போல உணர்ச்சி உண்டு. உங்களைப் போல எனக்கும் வாழ உரிமை உண்டு என்பதை மறந்துவிட்டீர்கள்."

" நீயா இவ்வாறு பேசுவது!" என்று துக்கங் கலந்த குரலில் கேட்டார்.

" உங்கள் மாஜி மனைவி லட்சுமிதான் இவ்வாறு பேசுவது" என்று அமைதியாகப் பதில் சொன்னாள்.

" அடி துரோகி! நீ உலகத்தில் வாழ்வது வெறும் பாரம்."

" அதைப்பற்றி முடிவுகட்ட இப்பொழுது உங்களுக்கு உரிமை இல்லை."

" அடி பாவி! அவமானச் சின்னமாக ஏன் வாழ்கிறாய். எங்கேயாவது........"

" குளத்திலோ ரயிலடியிலோ"

" ஆமாம் ஒழிந்துபோ. மாசுபடிந்த வாழ்க்கை! அவமானச் சின்னம்!"

" ஏன்! இப்பொழுது நான் பலருக்கும் பயன்பட வாழ்கிறேன். 'பொதுத்தொண்டில்' ஈடுபட்டிருக்கிறேன்."

" ஆ! என்ன தைரியம். என் மனைவி லட்சுமியா இவ்வாறு பேசுவது. அடங்கிக் குணக்குன்றாக விளங்கிய நீயா இந்த பயங்கர வாழ்க்கையில்"

“பயிற்சி பெற்றுத் தேர்ச்சி அடைய விரும்புகிறேன். குளத்திலும் கிணற்றிலும் விழுந்து நாற்றம் விளைவிப்பதால் பலருக்கு நோய் உண்டாகலாம். அதைவிடப் பலருக்கும் பயன்பட்டு”

“சமூகத்தில் துர்நாற்றத்தை உண்டாக்குவிக்கிருய்.”

“அந்தச் சாக்கடையில் நீங்களும்”

“வாயை மூடு. அறிவு கெட்டு”

“அது ஒன்றுதான் இருக்கிறது என்று நம்பினேன். அதுவும் இல்லை என்று முடிவு கட்டிவிட்டீர்கள். நான் எங்கள் வீட்டில்...”

“என்ன”

“தனசேகரரின் மாஜி மனைவி லட்சுமி என்று தான் விளம்பரம் எழுதி..........” என்று மெல்ல நீட்டிப் பேசினுள்.

“தொங்கவிட்டிருக்கிருயா! அடி பாவி! எந்த அவமானம் தாங்க முடியாமல் உன்னை”

“அனுப்பினீர்களோ அந்த அவமானத்தின் பேரிலேயே பழி தீர்க்க முடிவு கட்டி விட்டேன்.”

“இது வரையிலும் ஏதாவது அப்படி”

“இல்லை. இனிமேல் தான் தொடங்கப் போகிறேன்.”

“ஆகா! தாராளமாகத் தொடங்கு” என்று சொல்லி விட்டுப் பெட்டியில் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்துச் சுட நேரே அவள் முன் வைத்து நீட்டினர்.

“கொலை! கொலை!”

“ஆம். என் மனைவியை நானே கொலை செய்யத் துணிந்துவிட்டேன். இனி தப்ப முடியாது.”

"நான் உங்கள் மனைவி அல்ல. நான் இப்பொழுது சுதந்தரமாக வாழ்கிறேன் என்பதை மறந்து விடாதீர்கள். பொருள் கொடுத்தாலே என்னிடம் பேச உங்களுக்கு அனுமதி கிடைக்கக்கூடிய உயர்ந்த நிலையில் இருக்கிறேன். நான் உங்கள் மனைவி என்பது பழைய மறந்துபோன நிகழ்ச்சி"

"பேசு! எவ்வளவு வேண்டுமானாலும் பேசு."

"பேசுகிறேன். சாவதற்கு முன்னால் பேசுகிறேன். என்னை வீட்டைவிட்டு வெளியே அனுப்பினீர்களே அது யார் குற்றம்? வலிய ஒருவன் என்னைக் கெடுத்தால் அது யார் குற்றம்? அதற்கு நான் எவ்வாறு பொறுப்பு? கள்ளன் கையில் அகப்பட்டபொழுது வீரமற்று பேடிபோல வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தீர்களே இப்பொழுது ஒரு பெண்ணின் முன்னால் காட்டும் அந்த வீரம் எங்கே ஒளிந்தது? துணிந்து நீங்கள் எதிர்த்திருந்தால் என் மானம் கெடுவதற்கு வழி ஏற்பட்டிருக்குமா! ஒருக்கால் உங்கள் உயிர் போயிருக்கலாம். போகட்டுமே! எந்த மானத்திற்காக அஞ்சி வாழ்கிறீர்களோ அந்த மானத்திற்காக உயிர் விடத் துணிந்திருக்க வேண்டும்."

"உனக்காக நான்........"

"உயிர்விடக் கோழையாக இருந்திருக்கலாம்; கவலை இல்லை. ஆனால் நான் மானமிழந்துவிட்டேன் என்பதை மறைத்து வைத்து வாழுவாவது திறமை இருந்ததா? அந்த அறிவும் இல்லாமல் என் மனைவி கற்பழிக்கப்பட்டாள் என்று நாலுபேரிடம் சொல்லிக் கொள்ள உங்களுக்கு வெட்கமில்லையா?"

"பின்"

"என்ன செய்வது என்று கேட்கிறீர்கள். என் மனத்தால் நான் கெட்டேனா! நானாக விரும்பி என் நிறையைக்

கெடுத்துக் கொண்டேனு! வழியிலே எத்தனையோ கார்களில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அடிபட்டவர்களை அப்படியேவா விட்டுவிடுகிறார்கள்! ஆஸ்பத்திரியில் அனுப்பி அவர்கள் காயத்தை ஆற்ற முயற்சிப்பது இல்லையா! அடிபட்டுவிட்டது என்று சொல்லி அப்படியே சாகவிட்டு விடுகிறார்களா! எனக்கு ஏற்பட்ட மனப் புண்ணுக்கும் கார் விபத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன? நீங்கள் அல்லவா எனக்கு ஆறுதல் சொல்லி இருக்கவேண்டும்."

"இப்படி யெல்லாம்"

"எப்படிப் பேசக் கற்றுக்கொண்டேன் என்று கேட்கிறீர்கள். அதோ உங்கள் கைத்துப்பாக்கி என்னைப் பேச வைக்கிறது. சாகப்போகிறவள் எதற்காகக் கவலைப்பட வேண்டும். சாகிறேன். ஆனுல் நீங்கள் மட்டும் எப்படி நிம்மதியாக வாழப்போகிறீர்கள்! பாவம்! மற்றோர் பெண்ணை மணஞ் செய்து கொண்டீர்கள்! என்னிடம் மறைத்துப் பலன் இல்லை. அவள் மட்டும் வேறொருவனிடம் விரும்பிக் காதல் கொண்டு"

"இதெல்லாம்"

"எப்படித் தெரியும் என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறீர்களா! நான் செத்தால் சாகிறேன். அந்த இளம் பெண்ணின் வாழ்க்கையைக் கெடுக்காதீர்கள். பாவம்! இளம் பெண்! இளமையிலேயே தனக்கு விருப்பமான இளைஞனைக் காதலித்தாள். இருவரும் மணஞ்செய்து கொண்டு இன்ப வாழ்க்கை நடத்தவேண்டுமென்று இன்ப நினைவுகள் பல கொண்டனர். பாவம்! பெற்றோர்கள் உங்கள் செல்வத்தைக் கண்டு தம் கடமையை மறந்தனர். அவள் பைத்தியம் கொண்டாள்."

"பிறகு தெளிந்துவிட்டது. இதெல்லாம் தெரிந்த கதைதானே."

தெரியாத கதையையும் சொல்லி முடித்து விடுகிறேன். உங்கள் டிரைவர் சுந்தரம் தான் தங்கத்தின் காதலன். அது கூட சுந்தரம் சொல்லச் சொன்னதால்தான் நானும் உண்மையைச் சொல்லுகிறேன்.''

"ஆ! உண்மையாகவா!''—பல்லைக் கடித்துக் கொண்டார்.

"பயங்கரமாக இருக்கிறதல்லவா! அதுவல்ல முக்கியம். பேசாமல் தங்கத்தைச் சுந்தரத்துக்குத் திருமணம்.''

"திருமணம்! அஹ்அஹ்ஹா. திருமணம்! முதலில் நீ, இரண்டாவது சுந்தரம்; மூன்ருவது தங்கம்.''

"நான்காவது நீங்கள்''

'டக் டக்' என்று கதவைத் தட்டும் சப்தம் கேட்கிறது.

"அதோ! சுந்தரமும் கதவு தட்டுகிருன். ஒழிந்தான் சுந்தரம். கதவைத் திற.''

"முடியாது. நான் திறக்கமாட்டேன். முதலில் என்னைக் கொலை செய்துவிடுங்கள். பிறகு என் பிணத்தை அப்புறம் தள்ளிவிட்டுக் கதவைத் திறங்கள்'' என்று கதவின் பக்கத்தில் நின்று கொண்டாள்.

அவளைத் தள்ள முயற்சித்தார். ஆனால் முடியவில்லை. "ஒழிந்து போ.'' துப்பாக்கியை அவளை நோக்கிக் குறிவைத்தார். லட்சுமியின் கைகால்கள் அச்சத்தால் நடு நடுங்க ஆரம்பித்தது. அந்தத் துப்பாக்கியிலிருந்து வெளிவரும் ரவைகளைக் காண அஞ்சி அப்படியே இரண்டு கண்களையும் இறுக மூடிக்கொண்டாள். உலகம் இருண்டு விட்டது. ஆனால் தன் கணவன் கையினுல் சாகிருேமே என்ற சாதாரண திருப்தியும் அந்தச் சமயத்தில் தோன்ருமலில்லை. வெகுநேரம் கண்ணை மூடினுள். துப்பாக்கியிலிருந்து வெடி சப்தம் எழவில்லை.

"ஊம்! சுடுங்கள். எவ்வளவு நேரம் இந்த வேதனையைத் தாங்குவது. சீக்கிரம் முடித்துவிடுங்கள். ஏன்? இதற்குக் கூடவா தைரியம் இல்லை."

"இல்லை. இதில் குண்டுகள் இல்லை. யாரோ எடுத்து ஒளித்து வைத்துவிட்டார்கள்."

இருளில் பளிச்சென்று வெளிச்சம் உண்டாயிற்று. அச்சம் இருந்த இடத்தில் வாழ நம்பிக்கை பிறந்துவிட்டது. தைரியமாக வெளிக் கதவைத் திறந்தாள்.

சுந்தரம் ஒரு வெள்ளைக் கடுதாசியைக் கொண்டு வந்து கொடுத்தான்.

"ஏன்! அதில் குண்டுகள் இல்லையே என்று கவலைப் படுகிறீர்களா ! அவசரத்தில் அறிவு கெட்டுவிடும். நீங்கள் என்னைச் சுட்டு வீழ்த்துவதாகத் தங்கத்தினிடம் வாய் தவறிக் கூறிவிட்டீர்கள். அதனால்தான் அதில் இருந்த குண்டுகளை முன்விழிப்புடன் தங்கம் எடுத்துவிட்டாள்."

"சுந்தரம் !"

"நான் துரோகி என்று சொல்ல முற்படுவீர்கள். அது கிடக்கட்டும். உங்கள் மனைவி குற்றமற்றவள். குணக் குன்று. உங்களை நினைத்து அல்லும் பகலும் கண்ணீர் விட்டுத் தரையெலாம் மெழுகி வந்தாள். அவள் விட்ட கண்ணீர் உங்கள் நெஞ்சை நனைக்கவில்லை. அவளை இந்த நிலையில் காட்டினாலாவது உங்கள் நெஞ்சம் சுடவாவது செய்கிறதா என்று பார்ப்பதற்குத்தான் இந்த நாடகம். உங்கள் நெஞ்சம் சுட்டது. அதுவும் வளர்ச்சிதான். அதற்கு உணர்ச்சி இருக்கத்தான் செய்கிறது. அது போதும். நான் தான் அந்த அம்மையாரை இவ்வாறு நடிக்க வேண்டு மென்று வேண்டிக் கொண்டேன். சாவதற்குத் துணிந்த அவர்கள் எதையும் மேற்கொள்ள சித்தமானார்கள். அப்

படியாவது உங்களுக்குப் புத்தி பிறக்காதா என்ற ஏக்கத்தால் இந்தச் சிறு நாடகத்திற்கு ஏற்பாடு செய்தேன். அவர்களை ஏற்றுக்கொண்டு வாழ்க்கை நடத்துங்கள்.”

“முடியாது. அவள் வாழ்க்கையில் தவறியவள் தான்”

“அப்படியானல் தங்கம்? அதை மறைத்தும் வாழலாம் என்று நீங்கள் தங்கத்தினிடம் குழைந்து பேசவில்லையா! அழகி என்பதால் அங்கே உங்கள் உள்ளம் தவறு செய்ய இடங்கொடுத்து விட்டதா! உங்களிடத்தில் நியாயம் இருக்கிறதா என்று சிந்தித்துப் பாருங்கள்.”

“சுந்தரம்! நீ உண்ட வீட்டிற்கு”

“இரண்டகம் நான் செய்யவில்லை. வண்டியோட்டினேன். அதற்காகச் சம்பளம் கொடுத்தீர்கள். உங்கள் வாழ்க்கை அமைதியாகக் கழிய வேண்டும் என்பதற்குத் தான் இந்த யோசனை. சிந்தித்துப் பாருங்கள்! நான் வருகிறேன். அதோ என் ராஜிஞமா கடிதம். என் கடமை முடிந்து விட்டது. காரை வீட்டில் விட்டிருக்கிறேன். டாக்ஸி உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. இனி நான் டிரைவர் அல்ல. உங்களைப் போலச் சுதந்தர மனிதன்.

அம்மா! உங்கள் வாழ்வு இனித் தெளிந்த நீரோடையாகச் செல்லும். அதில் புயலும் சூருவளியும் வீசாது. வருகிறேன்.”

“லட்சுமி! நீ நல்ல முறையிலேயே வாழ்க்கை நடத்திஞயா! நிச்சயந்தாஞ! சுந்தரம் சொல்வது உண்மைதாஞ!”

“ஆம். ஆனல் அது உங்களைக் கவரவில்லை. தீமை தான் அதிர்ச்சியை உண்டாக்கி விட்டிருக்கிறது. உலகமே அப்படித்தான். நன்மையைப் பாராட்டுவது இல்லை. தவறுகளைத் தூற்றுவதற்குத் தாமதிப்பதில்லை. சுந்தரத்தின்

ஏற்பாட்டின்படி இந்த விடுதியில் உங்களைச் சந்திப்பதற்காகவே காத்திருந்தேன்."

"உன்னை ஏற்றுக் கொள்வதில் இனித் தயங்கவில்லை லட்சுமி! தவறு என்னுடையதுதான். ஆனால் சுந்தரம் செய்த துரோகம்."

"துரோகம் இல்லை. அவர்கள் இன்ப வாழ்வில் நீங்கள் ஒரு சூறுவளியாக அமைந்து விட்டீர்கள்."

"அது ஒருக்காலும் முடியாது. நீ என் மனைவி. நீ என்னோடு வாழ்வதில் தடை இல்லை. கஷ்டமும் இல்லை. தங்கமும் என் மனைவிதான். அவள் இன்னொருவனோடு செல்லுவதை ஒருக்காலும் சம்மதிக்க முடியாது. இனி அவன் எப்படி நம் வீட்டிற்கு வரமுடியும்! தங்கம் தானாக வழிக்கு வருகிறாள்" என்று சொல்லிக் கொண்டு "புறப்படு" என்று சொல்லி வெளியே காத்துக் கிடந்த டாக்ஸியிலே இருவரும் புறப்பட்டனர்.

## [ 13 ]

"அக்கா! உங்கள் வாழ்க்கை மறுமலர்ச்சி அடைந்து விட்டது."

"தங்கம்! எல்லாம் நீ இந்த வீட்டில் அடியெடுத்து வைத்த நன்மை தானம்மா!"

"இல்லை. நான் இந்த வீட்டை விட்டு அடியெடுத்து வைக்கப் போவதால் தான்."

"தங்கம்! என் வாழ்க்கையை மலரச்செய்த உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் என்றுதான் தெரியவில்லை."

“சிறையிலிருக்கும் பறவைக்கு விடுதலை அளிப்பது தான்”

இவ்வாறு தங்கமும் லட்சுமியும் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் தனசேகரர் அந்தப்பக்கம் வந்தார்.

“இன்றுதான் நான் பாக்கியம் செய்தேன். நீங்கள் இவ்வளவு ஒற்றுமையாக இருந்து பழகுவது எனக்கு ரொம்பவும் திருப்தி. லட்சுமி! தங்கத்திற்கு ஒரு குறைவுமில்லாமல் நீ பார்த்துக்கொள்ள வேண்டும்.”

“பாவம்! தங்கம் தாய் வீட்டுக்குப் போகவேண்டுமென்று அதே கவலையாய் இருக்கிருள்.”

“அதெல்லாம் எனக்குத் தெரியும். அதற்கென்ன அவர்களையே இங்கு வரவழைத்து விட்டால் போவது. நாளைக்கே வரச் சொல்கிறேன். இதோ இன்றே ஆள் அனுப்புகிறேன்.”

“சரி! அவர்களையாவது வரவழைக்கச் சொல்லு அக்கா!”

“சரி. கட்டாயம் நாளைக்கு வந்துவிடுவார்கள். நிம்மதியாக இருக்கலாம்” என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு நீங்கினர்.

அன்று இரவு தங்கத்திற்குச் சீக்கிரத்தில் தூக்கம் வரவில்லை. அவளுடைய நினைவு எல்லாம் தனி வீட்டில் சுந்தரத்தோடு குடித்தனம் செய்வதும் உரிமையாகப் பழகும் அந்த இன்ப வாழ்விலே சுந்தரமும் தானும் ........ (அந்தக் கற்பனையைப் பிறர் காண உரிமை கிடையாது என்ற காரணத்தால் விடப்பட்டிருக்கிறது) இத்தகைய இன்ப நினைவுகளில் அவள் ஆழ்ந்து கிடந்தாள். அப்பொழுது யாரோ மெல்ல ஓர் உருவம் அந்தப் பக்கம் வந்து கொண்டிருந்தது அவள் கண்களுக்குப் புலப்பட்டது.

" ஆம். சுந்தரம் தான் " — இந்த எண்ணம் அவள் உள்ளத்தில் எல்லையில்லா இன்பத்தை விளைவித்தது. " ஆனால் அவர் ஏன் இப்படி அவசரப்பட வேண்டும் ! இது வரையிலும் கண்ணியமாக நடந்து கொண்ட சுந்தரம் ... இப்பொழுது ...... ஆம் இளமை கட்டுக்கடங்காது.

" சந்தர்ப்பம் கிடைத்த பொழுதெல்லாம் கூடத் திருமணம ஆகாமல் தொடுவதில்லை என்று உறுதி கொண்ட அந்தச் சுந்தரமா இப்பொழுது ... மனத்தைக் கட்டுப்படுத்திக் கண்ணியமாக வாழ்ந்தோம். ஆம் இப்பொழுதும் தவறக்கூடாது. முடியாது ! எங்கள் உணர்வை இனிக் கட்டுப்படுத்த முடியாது. ஆற்றின் பெரு வெள்ளத்தை ஓரளவுதான் கட்டுப்படுத்த முடியும் " — இந்த எண்ணங்களெல்லாம் அவள் மனத்தில் தோன்றிக் கொண்டிருந்தன.

தென்றல் காற்று மெல்லென வீசிக் கொண்டிருந்தது. பக்கத்தில் இருந்த தோட்டத்தில் பூத்துக் கிடந்த மலர்களின் மெல்லிய மணம் அவள் உணர்ச்சிகளைத் தூண்ட ஆரம்பித்தது. இனி அடையப் போகும் இன்பம் குறித்து நினைக்கும் பொழுது அவள் உள்ளத்தில் ஏற்பட்ட துடிப்பைப்போல அவள் உடலில் எல்லாம் ஒருவகையான புத்துணர்ச்சி தோன்ற ஆரம்பித்தது. அவன் வருகையை ஒவ்வொரு விநாடியும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த உருவமோ சீக்கிரம் வருவதாக இல்லை. ஏதோ அஞ்சி அஞ்சி மெல்ல மெல்ல அடியெடுத்து வைப்பது போல இருந்தது.

" ஏன் இப்படி அஞ்சி மெல்ல வரவேண்டும் " என்று அவள் வருத்தப்பட்டாள்.

அதே நேரத்தில் அந்த உருவத்தைக் கண்டு விட்டார் தனசேகரர். வீட்டிலிருந்த மெயின் ஸ்விட்சை நிறுத்திவிட்டு

விளக்கொளி சிறிதுகூட இல்லாமல் அந்த உருவத்தைப் பின் தொடர்ந்தார்.

எரிமலை நெருப்பு கக்க ஆரம்பித்தது. அவர் நெஞ்சம் கோபத்தால் குமுற ஆரம்பித்தது. கையில் ஒரு பெரிய தடி ஒன்றை எடுத்துக்கொண்டு பின்தொடர்ந்தார்.

“இனிச் சுந்தரம் ஒழிந்தான். அவன் கை காலை உடைத்து விடுகிறேன்” என்று தன் மனத்திற்குள் சொல்லிக் கொண்டார்.

அந்த உருவம் தங்கம் இருந்த அறையின் கதவருகில் நின்றது. தங்கம் உடனே வந்து கதவைத் திறந்தாள்.

“ஏன் இப்படிப் பயப்படுகிறீர், தைரியமாக வரலாம்” என்று சொல்லி வரவேற்றாள்.

“தைரியமாக வருவாய்” என்று சொல்லிக் கொண்டு ஓங்கிப் பின்புறம் ஒரு அடி தடியால் கொடுத்தார்.

“அம்மாடி!” என்று சொல்லி தொப்பென்று கீழே விழுந்தான்.

“அய்யோ!” என்று அலறி ஓடோடி வந்த தங்கத்தைப் பிடித்துத் தடுத்தார்.

“என்னைத் தடுக்க வேண்டாம். அவர் போன பிறகு”

“நீயும் போவாய். முதலில் அவன் ஒழியட்டும்! அவ்வளவு திமிரா உங்களுக்கு” என்று உரக்கக் கத்த ஆரம்பித்தார். தூங்கிக் கொண்டிருந்த வள்ளி சட்டென்று எழுந்து என்ன நடந்தது என்று பார்க்க ஓடோடி வந்தாள்.

“வள்ளி! சுந்தரத்தை அடித்துக் கொன்று விட்டார். அய்யோ!” என்று துடி துடித்து அழுதாள்.

"ஆ" என்று அவளும் அலறி, விழுந்த அவனைக் கை கொடுத்து அணைத்து எடுத்து நிறுத்தினாள். அதற்குள் வீட்டு மெயின் ஸ்விட்சு போடப்பட்டது.

"ஆ! நீ யா! அடபாவி! இங்குமா வந்துவிட்டாய்" என்று சொல்லி அங்கே விழுந்து கிடந்த சிங்கப்பூரு கண்ணனை நோக்கி வள்ளி அங்கலாய்த்தாள்.

எல்லாருக்கும் தூக்கி வாரிப்போட்டது. தங்கத்துக்குப் போனஉயிர் திரும்பி வந்தது போன்றிருந்தது. தன சேகரருக்குக் கோபம் மறைந்து ஏமாற்றம் ஏற்பட்டது. அதே சமயத்தில் அங்கு வந்த லட்சுமி,

"ஆம். அதே திருடன்தான். இவன் தான் என் வாழ்வை!"

என்று சொல்லும்பொழுது தனசேகரருக்கு அந்தத் திருடன் யார் என்பது நன்கு விளங்கி விட்டது. சினிமாப் படத்தின் திருப்புக் காட்சியைப் போல அவர் சிந்தனை மின்னலைப் போலப் பழைய நிகழ்ச்சிக்கு வேகமாகச் சென்றது. உடனே அவரால் பழி உணர்ச்சியை அடக்க முடியவில்லை. மறுபடியும் அந்தத் தடியால் ஓங்கி ஒரு அடி போட்டார். மண்டையில் அடிபட்டு இரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்து வள்ளியின் சேலையை நனைத்துவிட்டது.

அவன் அப்படியே மயங்கி விழுந்துவிட்டான். வள்ளி தன் சேலை முகப்பில் சட்டென்று ஒரு புறம கிழித்து இரத்தம் பீறிடாதபடி தண்ணீரில் நனைத்துக் கட்டத் தொடங்கினாள். பக்கத்தில் மண் கூஜாவிலிருந்த தண்ணீரைக் கொண்டு வந்து அவன் முகத்தில் தெளித்தாள். ஒரு டம்ளரில் தண்ணீர் கொண்டுவந்து குடிப்பித்தாள்.

அவன் கண்கள் மெல்லத் திறந்தன. பக்கத்தில் சிறிது தூரத்தில் நின்று கொண்டிருந்த லட்சுமியைப்

பார்க்க அவன் கண்கள் கூசின. அவ்வம்மையாரும் அந்தப் பழைய ஞாபகங்களை நினைவு படுத்திக்கொள்ள விருப்ப மில்லாமல் அந்த இடத்தை விட்டுக் கீழே இறங்கி விட்டார் கள். அவர்கள் தன்னை அடித்ததற்காக அவன் வருத்தப் படுவதாகவும் தெரியவில்லை.

" ஐயா! இந்த இரண்டடிகள் போதாது. உங்களுக்குச் சரியாக அடிக்கத் தெரியவில்லை" என்று சொல்லத் தொடங்கினான்.

[அவர் மறுபடியும் தடியெடுத்தார்.]

" ஆம். இந்த முறை அடிப்பது என் உயிர் ஒரேயடி யாகப் போய்விட வேண்டும்! ஓங்கி அடியுங்கள்" என்று கூறி மண்டையைக் காட்டிக் கண்களை இறுக மூடிக் கொண் டான்.

சட்டென்று வள்ளி இடைமறித்து அவன் தலைமீது விழுந்து குப்புறப் படுத்துக் கொண்டாள்.

தனசேகரருக்கு அவன் சொன்னதும் வள்ளியின் செயலும் ஆச்சரியத்தை விளைவித்தது. ஓங்கிய தடியைக் கீழே போட்டு விட்டார். மறுபடியும் கண்களைத் திறந்து,

" வள்ளீ! நீ விலகிப்போ. நான் வாழத்தகாதவன்" என்று கூறிக்கொண்டே வள்ளியை எழுந்திருக்கும்படி வேண்டினான். அவரும் தடியைப் போட்டு விட்டதால் வள்ளியும் விலகிக்கொண்டாள்.

" வள்ளீ! இவன் உனக்கு என்ன வேண்டும்?"

" என் கணவர்"

" திருடனா உன் கணவன்!"

வெட்கித் தலைகுனிந்தாள். அதற்கப்புறம் ஒன்றும் பேசவில்லை. அவனும் அடிபட்ட வேகத்தில் மயங்கி

விழுந்து விட்டான். மற்றைய எல்லாரும் தத்தம் இடங் களுக்குச் சென்று விட்டனர். வள்ளிமட்டும் மெல்ல விசிறி கொண்டு விசிற ஆரம்பித்தாள்.

[சிறிது நேரம் பொறுத்து மூர்ச்சை தெளிந்தது.]

"வள்ளீ! நீ என்னைப் போலீசாரிடம் காட்டிக் கொடுப் பதாகச் சொல்லி என்னைத் திருத்த முயன்றாய்; என்னைத் திருத்த முடியவில்லை. அது இன்னும் என்னைக் கொடியவ னாக்கிற்று. உன்னை ஒழித்துவிடவே அவ்வெண்ணம் என்னைத் தூண்டியது. உன்னைக் கொல்ல வந்தேன் நான். வள்ளீ! என்னைக் காப்பாற்ற இடை மறித்து விழுந்தாய். உன் தியாகம் என் மனத்தை மாற்றி விட்டது. வள்ளீ! நான் திருந்தி விட்டேன். என்னை மன்னிப்பாயா! மன்னித் தேன் என்று ஒரு முறை சொல்."

"உடம்பை அலட்டிக் கொள்ளாதீர்கள்" என்று தன் முன்றானையால் கசியும் ரத்தத்தைத் துடைக்க ஆரம்பித் தாள்.

# [ 14 ]

பொழுது விடிந்தது. தங்கத்தின் தாயாரும் தகப்ப னரும் மூட்டை முடிச்சுகளோடு வந்து சேர்ந்தனர்.

"வாங்க! வாங்க! உங்க மகள் உங்களைப் பார்க்க வேணு மென்று"

"ஆவலாய்த்தான் இருக்கும். நாங்களும் தீபாவளிக்கு வரச் சொன்னோம்; பொங்கலுக்கு வரும்படிக் கடிதம் எழு தினோம். நீங்கள்தான்"

"ஆமாம். எனக்கு இங்கே வியாபார விஷயமாய் ஒழிவே இல்லே. தங்கத்தைத் தனியாக அனுப்பிவிட்டால்"

"ஆமாம் வீட்டிலே உங்களுக்குச் சவுகரியத்துக்கு"

"அதற்குத்தான் நீங்களே இங்கு வந்து ஒரு மாதம் இருந்து விட்டு"

"எங்கே ? வயல் வாய்க்கால் பயிர் பச்சை மாடு கழனி இதெல்லாம் விட்டு விட்டு இங்கே இருக்க முடியுங்களா ?"

அதற்குள் தங்கம் வந்தாள்.

"ஏன்'பா மூட்டை முடிச்சுகளோடு"

"இப்பத்தான் வந்தோம்."

"அது தெரியும். இப்பவே புறப்படுங்க. என் மூட்டை முடிச்சுகளேயும் கட்டி வச்சிருக்கேன். உடனே புறப்படுங்க."

**தனசேகரர் :** "இல்லே ! அவளேத் தாய் வீட்டுக்கு அனுப்ப வேண்ணு"

**தங்கம் :** இல்லே ! இந்த வீட்டுக்கு அனுப்பி வைத்ததுதான்!

அதற்குள் தனசேகரரின் முதல் மனேவி லட்சுமி அந்தப் பக்கம் வந்தாள்.

"இவங்க யாரு" என்று தங்கத்தின் தாயார் கேட்டாள்.

"இவங்க தான் இவர் மனேவி"—

"அய்யோ மகளே ! அவங்களேயும் கூட்டிக் கொண்டு வந்து வச்சிகிட்டாங்களா. அதுக்குத்தான் என் மகள் வந்துவிடுகிறேன் என்கிருள். என்ன கொடுமை நடந்ததோ ! சக்களத்தி சண்டையாயிருக்கும்."

"என் ஒரே மகள் சொத்து எல்லாவற்றிற்கும் பாத்தியதை யாவாள் என்றெல்லவா அவளேக் கொடுத்தேன்.

முதல் தாரத்தை விலக்கிவிட்டேன் என்று சொல்லி ஏமாற்றி விட்டீர்களே" என்று தங்கத்தின் தகப்பனார் கேட்டார்.

இந்தப் பேச்சுக்களைக் கேட்க விருப்பமில்லாமல் லட்சுமி அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

"அதெல்லாம் இல்லை தங்கத்தின்"

"நடத்தை சரியாக இல்லை. ஆமாம்'பா. என் நடத்தை சரியாக இல்லை. அதனால்தான்"

"என்னம்மா! என் தலையை இறக்கி வைத்து விட்டாயே!"

"என்றைக்கு நீங்கள் அவர் செல்வத்துக்குப் பணிந்து என்னைக் கொடுத்தீர்களோ அன்றைக்கே தலையை இறக்கித்தானே விட்டீர்கள்."

"அதைக் கேக்கலேம்'மா. உன்னைப்பற்றி அவர்"

"அவர் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. நான் இனி அரைக்ஷணம் கூட இருக்க முடியாது."

"அதுக்குத்தான் கூப்பிட்டனுப்பினேனுங்க. கொஞ்சம் புத்தி சொல்லி நம்ம"

"குடும்ப கவுரவத்தை நிலை நாட்டவேண்டும். அதைச் செய்யத்தான் துணிந்துவிட்டேன். ஏற்கனவே மணமான ஒருவரை மணஞ் செய்துகொண்டு நான் வாழ்வது நம் குடும்பத்துக்கு அகௌரவம்'பா."

"ஆனது ஆகிவிட்டது. இனி"

"நான் மணமாகாத ஒருவரை"

"கலியாணம் செய்து கொள்ளப் போகிறாய்! பைத்தியக்காரி! நீ இந்த வீட்டை விட்டு வெளியே போக முடியாது"—என்று சிறிது கோபமாகத் தனசேகரர் பேசத் தொடங்கினார்.

"பைத்தியக்காரி. ஆம். நான் பைத்தியக்காரிதான். எனக்குத் தாலி கட்டியபோது நான் பைத்தியக்காரிதான். அந்த உண்மையை நீங்கள் மறுக்கமுடியாது. எனக்குத் தெரியாமல் என்னைக் கலியாணஞ் செய்துகொண்டது செல்லாது என்பதை உணர்த்தத்தான் என் பெற்றோர்களை வரவழைத்தேன். அம்மா! எனக்கு மணமான போது நான் சுய உணர்வில் இருந்தேனா! அப்பா! நீங்கள் என் சம்மதத்தைப் பெற்று மணத்திற்கு ஏற்பாடு செய்தீர்களா! நான் என் மனங்கெட்டுப் பைத்திய நிலையில் இருந்தபோது செய்த ஏற்பாடு என்னைப் பாதிக்காது. உலகம் சொல்லலாம் நான் அவர் மனைவியென்று. என் மனச் சான்று அதற்கு இசையவில்லை. அம்மா! சிந்தித்துப் பாருங்கள். ஏன் அசையாமல் இருக்கிறீர்கள். ஐயா! தனசேகரரே என் மனச் சம்மதியில் நான் உங்களை மணந்தேனா! தூங்கிக் கிடந்த ஒருத்திக்குத் தாலி கட்டினால் செல்லுமா! அதைப் போலத்தான் என் நிலையும்."

"அப்பொழுது நீ?"

"நான் உங்கள் மனைவி அல்ல. இதுவரையிலும் நீங்கள் என்மீது அதிகாரம் செய்ய நினைத்தது தவறு. என்னைப் பைத்தியக்காரி பைத்தியக்காரி என்று பலமுறை சொல்லி இருக்கிறீர்கள். அந்தச் சொற்களே என்னைச் சிந்திக்கும்படித் தூண்டின. உரிமையில்லா என்மீது அதிகாரம் செலுத்திய உங்களை........"

"பைத்தியக்காரன் என்று சொல்ல ஒப்புக்கொள்கிறேன். அஸ்திவாரமில்லாத கட்டிடம் சரிந்து விழுந்துவிட்டது" என்று சுருக்கமாகப் பதில் சொன்னார்.

"அப்பொழுது யார் குற்றவாளி! நான் சுந்தரத்தைக் காதலித்தது குற்றமா. அவனை மணஞ் செய்து கொள்ள நினைத்தது தவறா!"

"அதற்கு விடை சொல்ல எனக்கு உரிமை இல்லை. உன் தாய் தந்தையர் பொறுப்பு."

அதற்குள் லட்சுமி மறுபடியும் அந்தப் பக்கம் வந்தாள்.

"அதோ உங்கள் மனைவி. அவர்களை வைத்துக் கொண்டு குடித்தனம் நடத்துங்கள். ஒருவனுக்கு ஒருத்தி. அதுதான் பண்பாடு."

"அம்மா தங்கம்! உண்மையில் நீ அறிவுடையவள். அந்த அறிவு நல்ல பண்பாட்டின் மீது வளர்ந்த அறிவு. நான் உண்மையிலேயே பைத்தியக்காரன் என்பதை இப் பொழுதுதான் உணர்கிறேன். பிறன் ஒருவன் செய்த குற்றத்திற்கு என் மனைவியின் வாழ்க்கையைப் பாழ்படுத்த நினைத்தது பைத்தியக்காரத்தனம். முதல் மனைவி யிருக் கும் பொழுது உன்னைப் போன்ற இளம் பெண்ணை மணக்க நினைத்தது அதைவிடப் பெரிய பைத்தியக்காரத்தனம். பெண்ணை அடிமைப்படுத்தி விடலாம் என்று நினைத்தேன்; நான் ஒரு பெரிய பைத்தியக்காரன். உன் உரிமையை மணம் என்ற பெயரால், செல்வத்தின் செருக்கால் கவர நினைத்தது அதைவிட மிகப் பெரிய பைத்தியக்காரத்தனம். என் கண்களைத் திறந்து வைத்து என் வாழ்வில் அமைதியை யும் தெளிவையும் ஏற்படுத்திய உனக்கு நான் என்றும் கடமைப்பட்டிருக்கின்றேன். நல்ல காலம் உன் பிடிவாதம் என்னை நல்வழியில் கொண்டு செலுத்திற்று.

"லட்சுமி அக்கா வீட்டில் இருந்திருந்தால் நீங்கள் தவற எண்ணி இருக்கமாட்டீர்கள். என்னுடைய பெற்றோர் கள் செய்த பெருந்தவறு மன்னிக்க முடியாத குற்றம். உங்களிடம் போராட்டம் ஏற்படுத்த வேண்டியிருந்தது. அதனால் உங்களிடம் வெறுப்பாக நடந்து கொண்டேன்.

நீங்கள் எனக்கு எதிரியானீர்கள். ஆனால் நீங்கள் நல்லவர் கள். உங்களின் பல நல்ல குணங்கள் என் மனத்தைவிட்டு அகலாது. மிகவும் கண்ணியமாக இதுவரையிலும் நடந்து கொண்டீர்கள். தவறு செய்தவர்கள் எல்லாம் என் பெற் றோர்களே. பெண்ணின் மனச் சம்மதம் பெறுமல் மணஞ் செய்வித்தது பெருங்குற்றம். அதைவிட நான் பைத்திய மானது தெரிந்தும் அதை மறைத்து வைத்து என்னை மணமனையில் உட்கார வைத்தது பெருங் குற்றம். இவை மன்னிக்க முடியாத குற்றங்கள்.

**தங்கத்தின் தந்தையார்:** "என்னம்மா இது!"

**தங்கம்:** "ஆம் மன்னிக்க முடியாத குற்றம்."

**தனசேகரர்:** ஆமாங்க! எல்லாம் உங்களால் வந்ததுதான். இவ்வளவு பெரிய சங்கடம். உங்கள் தவறைத் திருத்திக் கொள்ள வழி ஒன்றே ஒன்று இருக்கிறது. இனி தங்கம் சுந்தரத்தை மணஞ்செய்து கொள்வதற்கு நீங்கள் எந்தக் காரணத்தாலும் தடையாக இருக்கக் கூடாது."

**தந்தை:** "ஊம் நாங்கள் தடை செய்து இனி என்ன ஆகப் போகிறது! அப்பொழுதே இவள் எதிர்த்து இருக்க வேண்டாமா? மணஞ் செய்து கொள்ளமாட்டேன் என்று மறுத்திருக்க வேண்டாமா! அது யார் தவறு?

[அதற்குள் தங்கத்தின் தாயார் இடை மறித்து]

"அது யார் தவறு? சுந்தரம் இறந்து விட்டான் என்ற பத்திரிகைச் செய்தி வந்ததே அதுதான் அவளைப் பைத் தியக்காரி ஆக்கிவிட்டது. இல்லாவிட்டால்"

[அதற்குள் வள்ளி அங்கே வந்தாள்.]

“ உங்க மேலே எல்லாம் தப்பு இல்லே’ம்மா என்மேல் தான் தவறு. முதலிலேயே நான் உங்ககிட்டே சொல்லி இருக்க வேண்டும். என்மீது தான் தவறு” என்று அவள் தன் கருத்தைத் தெரிவித்தாள்.

பிறகு எல்லாரும் சந்தோஷமாக அங்கேயே சில நாட்கள் தங்கினர். தனசேகரர் சுந்தரத்தை வரவழைத்தார்.

“ சுந்தரம்! நீ கெட்டிக்காரன். அறிவுடையவன்.”

“ அறிவுடையவன் தான். ஆனால் அறிவாளிக்குத் தான் வேலை கிடையாது. அது கிடைக்கத் தவறியதால் தான் என் வாழ்வில் இவ்வளவு பெரிய போராட்டம். சென்னைக்கு வேலை தேடிச்சென்றேன். பேட்டி கிடைத்தது; ஆனால் வேலை கிடைக்கவில்லை. அந்த வேலையில்லாத் திண்டாட்டந் தான் எங்கள் வாழ்க்கைப் படகைக் கவிழ்த்து விட்டது.”

“ கவலைப் படாதே. கவிழ்ந்த படகு நிலைத்து விட்டது. நீயும் தங்கமும் ”

“ உங்கள் ஆசி ”

“ இங்கேயே திருமணத்திற்கு ”

“ வேண்டாங்க. ரிஜிஸ்தர் ஆபீசில் பதிவு செய்து கொள்கிறோம். ஆடம்பரம் வேண்டியதில்லைங்க ! அவசியத்துக்காகச் செய்து கொண்டதைச் சீர்திருத்தம் என்று மேடைமேலே பேச ஆரம்பித்து விடுவார்கள். என்னை வேறே அந்தக் கூட்டங்களுக்கு ”

“ தலைமை வகிக்கக் கூப்பிடுவார்கள் என்று நினைக்கிறாய். அந்த மாதிரி சந்தர்ப்பம் கிடைத்தால் அது எனக்குத்தான் கிடைக்கும். உன்னைவிட எனக்குத்தான் அதிகமான தகுதி உண்டு. நீ விரும்பியவளை மணஞ்

செய்து கொள்கிறாய் ; அது ஒன்றும் சீர்திருத்தம் இல்லை. நான் விரும்பிய ஒருத்தியை விட்டுக் கொடுத்தேனே அது தான் சீர்திருத்தம்."

"இந்த அவசியமில்லாத ஆராய்ச்சிக்கெல்லாம் இடங் கொடுக்கக் கூடாது என்றுதான் பதிவுத் திருமணம் செய்து கொள்ள"

"நானே முன்னிருந்து அதை நடத்தி வைக்கிறேன்."

# [ 15 ]

மறுபடியும் அதே ஆற்றங்கரையில் வள்ளியின் குடிசை பொலிவு பெற்றது. வள்ளியின் தந்தை காலமாகிவிட்ட பிறகு பலநாள் அந்தக் குடிசை மூடிக்கிடந்தது. இப் பொழுது சிங்கப்பூரு கண்ணன் அதே குடிசையில் தங்கி விட்டான்.

அவன் கையில் பிச்சுவா கிடையாது ; தோள்களில் கலப்பை தாங்கி இரண்டு எருதுகளையும் ஓட்டிக்கொண்டு செல்லும் காட்சி சாதாரண காட்சியாக விளங்கி வந்தது.

"ஏன் இண்ணைக்கு நம்ம ஊருக்கு ஆடிப்பெருக்குப் பார்க்கச் சுந்தரமும் தங்கமும் வர்ராங்களாமே"

"வர்ராங்களா ! அதோ வந்து விட்டார்களே"

கன்னம் குழியச் சிரித்துக் கொண்டு தங்கம் சுந்தரத் தோடு பேசிக்கொண்டே வருவதைப் பார்த்தாள். ஆற்றின்

நீர் அலைகளிலும் சுழிகள் தோன்றி இனிய காட்சியாக விளங்கிற்று.

ஆவலாக, " அக்கா ! " என்று ஓடோடிச் சென்று வரவேற்ருள்.

" வள்ளீ ! " — இருவரும் தழுவிக் கொண்டனர். "

UNIVERSITY ... LIBRARY
14 AUG 1960
MADURAI

காக்ஸ்டன் அச்சகம், சென்னை - 1